பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 26 வெள்ளிக்கிழமை 10.07.2020 கதிர் 243

**இனி இது ரகசியம் அல்ல!**

முன்னர் மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் சில சொற்கள் அரசியல் ரீதியில் கவனத்துக் குரியனவாக இருந்தன.

'அப்பம் சாப்பிடுதல்', 'சலூன் கதவு' என்பன அவற்றில் ஓரிரு சொற்கள் '2015 ஜனவரி 08 ஜனாதிபதித் தேர்தல்

பக்கம்02 »

# தமிழர் தலைநகர் திருகோணமலையை எவருக்கும் தாரைவார்க்கவேமாட்டோம்!

## கோணேஸ்வரம் இந்துக்களின் புனித தலம்; பௌத்த மதத்தவர் உரிமை கோர முடியாது



*எல்லாவல மேதானந்த தேரரின் பிதற்றலுக்கு சம்பந்தன் பதிலடி*

கொழும்பு, ஜூலை 10

தமிழர்களின் தலைநகரான திருகோணமலையையும், இங்குள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் எவருக்கும் தாரைவார்க்கவே மாட்டோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருக்கோணேஸ்வரம் இந்துக்களின் புனித தலம் – இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலம். இதற்குப் பௌத்த மதத்தவர்கள் உரிமை கோர முடியாது எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

'திருக்கோணேஸ்வரம் கோயில் என்பது கோகர்ண்ண விகாரை என்றே கூறப்படுகின்றது. இதற்காக நாம் கோயிலை இடித்து விகாரை கட்டமாட்டோம். ஆனால், அந்தப் பகுதியில்

பக்கம் 02 »

## பிரபாகரன், பாலசிங்கத்தின் ஆவிகளாக உலாவும்

# சம்பந்தன், சுமந்திரனை உடன் சிறையில் தள்ளுக!

## அரசிடம் ராவணா பலய வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆவியாகத் திரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் ஆவியாக உலாவும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனையும் அரசு உடன் கைதுசெய்து சிறையில் அடைக்கவேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் கடும்போக்குவாத சிங்கள அமைப்பான ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்த சுததிஸ்ஸ தேரர்.

பக்கம் 02 »

## வடக்கு, கிழக்கு மக்களிடம் தேர்தலில் அக்கறையின்மை

மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களிடம் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அக்கறையின்மை ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பக்கம் 02 »

## வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டக் கட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 10

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிகள் மற்றும் குழுக்களை ஊக்குவிப்பது தொடர்பாக வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள, ஸ்டிக்கர்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலிலேயெ இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள

பக்கம் 02 »







## தேர்தல் பணிகளில் இராணுவம் 'அவுட்'

இம்முறை பொதுத்தேர்தல் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தப் போவதில்லை.

பக்கம் 02 »

## நவாலிப் படுகொலை நினைவேந்தல்



பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுவதற்கு முன்னர் 2014 செப்ரெம்பர், ஒக்டோபரில் நடந்தது இது.

அப்போதைய எதிரணி ஒரு பொது வேட்பாளரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நிறுத்த விரும்பியது. ஆனால் அது யார் என்பது இறுதி நேரம் வரை முடிவாகவில்லை. இழுபறி நீடித்தது.

எதிரணி வேட்பாளரை அறிவிக்காமல் தடுமாறுகின்றமையை ஒரு பெரிய கிண்டலாகக் கருதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை ஒரு பொதுக் கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்.

*"ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளராக ஆளும்தரப்பில்நான்தயார். என்னை எதிர்த்துப் போட்டியிட உங்கள் தரப்பில் யார் வரப் போகின்றீர்கள்? அந்த வேட்பாளர் யார் என்று இன்னும் தெரியவில்லையே. அவர் யார்?"* என்று நையாண்டிக் கேள்வியை மஹிந்தர் எழுப்பிய போது மேடையில் நேரடியாக அவருக்குப் பின்னால் சுதந்திரக் கட்சியின் செயலாளராக நமுட்டுச் சிரிப்புடன் பம்மிக் கொண்டு அமர்ந்திருந்தார் மைத்திரிபால சிறிசேன.

முன்னால் இருந்த மக்கள் கூட்டத்தை நோக்கி, என்னோடு போட்டி போடப் போகின்ற அந்த வேட்பாளர் யார் என்று மஹிந்த ராஜபக்ஷ சவால் விட்ட போது, அடுத்த ஓரிரு நாள்களில் அந்தச் சவாலை கையில் எடுக்கப் போகின்ற கூட்டு எதிரணியின் வேட்பாளர் தமக்குப் பின்னால் பம்மிக் கொண்டு, வாலைச் சுருட்டியபடி அமர்ந்திருக்கின்றார் என்பது மஹிந்தருக்குத் தெரிந்திருக்கவில்லை.

அடுத்த ஓரிரு நாள்களில் ஜனாதிபதி மஹிந்தரின் அலரி மாளிகை இல்லத்தில் மஹிந்தருடன் இருந்து இரவு விருந்தாக அப்பம் சாப்பிட்டார் அவரது கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன.

அப்போது கூட மைத்திரிபால சிறிசேன எதிரணிப் பக்கம் தாவலாம் என்ற புலனாய்வுச் செய்திகள் மஹிந்தருக்கு வந்தன. ஆனால் அவர் நம்பவில்லை. தமது கட்சியின் செயலாளராக, தனக்கு அடங்கிய அமைச்சராக, தன் மீது விசுவாசம் கொண்ட தோழனாக இருக்கும் மைத்திரி தனக்கு எதிரியாக ஒரு நாளும் போக மாட்டார் என மஹிந்தர் திடமாக நம்பினார்.

அடுத்த நாள் காலையில் கூட்டு எதிரணியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்ட போது அதிர்ந்து போனார் மஹிந்தர். அவருக்கு அதனை நம்ப முடியவில்லை.

நேற்றிரவு வரை என்னுடன் கூட இருந்து எனது வலது கரமாகச் செயற்பட்டவர், கடைசி நேரத்தில் ஒன்றாக அமர்ந்திருந்து அப்பம் சாப்பிட்டு விட்டு இப்படிச் செய்து விட்டாரே என்ற ஆதங்கம் மஹிந்தருக்கு.

சேர்ந்திருந்து செயற்பட்டு விட்டு இறுதி நேரத்தில் கழுத்தறுப்பை மேற்கொள்ளும் தரப்புகளை 'அப்பம் சாப்பிட்ட தரப்பு' என்று சொல்லும் அளவுக்கு தெற்கில் 'அப்பம் சாப்பிடல்' என்ற சொல் முக்கியத்துவம் பெற்றது.

அடுத்தது சலூன் கதவு.

சலூனில் இருக்கும் கதவை இரண்டு பக்கமும் தள்ளித் திறக்க முடியும். உள்ளேயிருந்து கொண்டு வெளியே தள்ளித் திறந்து கொண்டு வெளியே போகலாம். அதே போல வெளியில் இருந்தபடி உள்ளே தள்ளித் திறந்து கொண்டு உள்ளேயும் நுழையலாம்.

அப்போது சு.கட்சிக்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத் திமிர்த்தனத்தின் உச்சியில் இருந்தார். எதிரணியில் இருக்கும் பலரையும் பேரம் பேசி வளைத்துப் போட்டு தம் பக்கம் ஈர்த்துத் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதில் அவருக்கு நிகர் அவரே. அவரது சகோதரரும் அப்போதைய அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ அண்ணன் மஹிந்தவுக்காக – அவரின் பிரதிநிதியாக – இந்தப் பணியைக் கனகச்சிதமாக ஒப்பேற்றிக் கொண்டிருந்தார். 'குதிரை ஓட்டப் பேரம்' மூலம் அரசியல்வாதிகளைத் தம்

பக்கம் 11 »

## தேர்தல் பணிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரே பாதுகாப்பு மற்றும் தேர்தல் பணிகளில் ஈடுபடுவார்கள். எனவே, பாதுகாப்பு தொடர்பில் யாரும் சந்தேகமடையத் தேவையில்லை.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று ஊடக பிரதானிகளைச் சந்தித்தபோதே அவர் மேற்க்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சுதந்திரமான – நீதியான தேர்தல் நடைபெற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

குழப்பங்கள் எதுவுமின்றி தேர்தல் நடைபெற சகல தரப்பினரும் எமக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்– என்றார்.

## தமிழர் தலைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்தர்களுக்குரிய தொல்பொருள்கள் இருந்தால் அவை பாதுகாக்கப்பட வேண்டும்' என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

திருக்கோணேஸ்வரம் கோயில் அல்ல; அது கோகர்ண்ண விகாரை என்று எல்லாவல மேதானந்த தேரர் கூறும் கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம்.

தொல்பொருள்களைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் தமிழர்களின் பூர்வீக இடங்களினதும் இந்துக்களின் புனித தலங்களினதும் வரலாற்றை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலணி முன்னெடுக்க முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கவேமாட்டோம்.

இனவாத – மதவாதப் போக்கில் ஜனாதிபதி செயலணி செயற்பட்டால் அது நாட்டுக்குத்தான் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் – என்றார்.

**திருக்கோணேஸ்வரத்தின் வரலாறும் மகிமையும்**

இலங்கையிலுள்ள ஐந்து ஈஸ்வர ஆலயங்களில் ஒன்றாகவும், இரண்டு தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகவும் திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது.

இந்தப் புனித தலத்தின் மீது திருஞானசம்பந்தரால் தேவாரப் பதிகம் பாடப்பெற்றுள்ளது. அருணகிரிநாதரும் இந்தத் தலத்தின் மீது திருப்புகழ் பாடியுள்ளார்.

இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்பு மிகுந்தது. இத்தலத்தில், இறைவன் கோணேஸ்வரரும், இறைவி மாதுமையாளும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர்.

இந்தக் கோயிலின் தீர்த்தம் பாவநாசம் என அழைக்கப்படுகின்றது. அதன் அர்த்தம் பாவங்களை கழுவித் தீர்க்க வல்லது. தலவிருட்சமாக கல்லால மரம் விளங்குகின்றது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்க ராஜா என்ற மன்னன் கி.மு. 1300ஆம் ஆண்டளவில் கட்டினார் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

கி.பி. 1624ஆம் ஆண்டில் இந்தக் கோயிலை போர்த்துக்கேயர் அழித்தார்கள் என்றும் வரலாறு உண்டு.

ஆங்கிலேயர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு 1952ஆம் திருகோணமலையிலுள்ள பெரியார்களால் இந்த ஆலயம் மீளக்கட்டுவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் ஆகம முறைப்படி பூஜைகள் இடம்பெறுகின்றன. வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பதினெட்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில் சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

## நவாலிப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)









நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று மாலை பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து தேவாலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டு உள்ள நினைவுத் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தப் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியபோதிலும் அதனையும் மீறி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

1995ஆம் ஆண்டு ஜுலை மாதம் 9 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப் படையினரின் புக்கார விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக தேவாலயத்துக்கு அருகில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தூபியில் அஞ்சலி செலுத்துவதற்குப் பொலிஸார் தடை ஏற்படுத்தி இருந்தனர்.

பின்னர் அருட்தந்தையர்கள் மட்டும் சுடரேற்றி அஞ்சலி செலுத்த பொலிஸார் அனுமதித்தனர். அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தப் பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிஸாரின் தடைகளையும் மீறி சுடரேற்ற முற்பட்டபோது பொலிஸ் அதிகாரியொருவர் தடுத்தார். இருந்த போதிலும் அதனையும் மீறி சிவாஜிலிங்கம் நினைவு தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

இதனால் குழப்பம் ஏற்பட்டது. தொடர்ந்து பொலிஸாரின் தடைகளை மீறிப் பொது மக்கள் நினைவுத் தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று ஊடகப் பிரதானிகளைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாடாளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பில் மக்களுக்கு ஊடகங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இதே வேளை, எதிர்வரும் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும்.

கொரோனா அச்சம் நீங்கவில்லை என்பதை அனைவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தேர்தலைவிட மக்களின் உயிரே எமக்கு மேலானது.

இதற்கு அமைவாகவே வாக்களிப்பு நிலையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் அதிக தடவை சனிரைசர் பயன்படுத்த உள்ளமையால் இதற்கு மாத்திரம் மில்லியன் கணக்கில் செலவிட வேண்டியுள்ளது. வழமையாக நடைபெறும் தேர்தலை விட இம்முறை தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது.

அதாவது தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகள் சற்று வித்தியாசமாக காணப்படும். இதனால் இம்முறை தேர்தலுக்கு வழமையை விட அதிக நிதி செலவிட வேண்டி நிலை காணப்படுகின்றது.

சர்வாதிகார நாடு என்றால் இவ்வாறான தேர்தல் செலவீனங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, ஜனநாயக நாட்டில் தேர்தலை நடத்தும்போது தேர்தல் செலவீனங்களைத் தவிர்க்க முடியாது – என்றார்.

## சம்பந்தன்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

சமஷ்டி, சமஷ்டி என்று ஒப்பாரி வைத்து இலங்கையை இரு நாடுகளாக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவை நிறைவேற்றுவதே சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் திட்டமாக இருக்கின்றது.

நல்லாட்சியில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருவரும் அயராது பாடுபட்டார்கள். எனினும், அது சரிவரவில்லை.

இந்தநிலையில், இந்த ஆட்சியில் புலிகள் ஆதரவைக்கொண்ட சர்வதேச நாடுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் சம்பந்தனும் சுமந்திரனும் குறியாகவுள்ளனர். இதற்கு இந்த அரசு இடம்கொடுக்காது என்று எமக்குத் திரியும்.

எனினும், புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆவியாகத் திரியும் சம்பந்தனையும், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் ஆவியாக உலாவும் சுமந்திரனையும் அரசு உடன் கைதுசெய்து சிறையில் அடைக்கவேண்டும். ஏனெனில் இவர்கள் நாட்டுக்கு மிகவும் ஆபத்தானவர்கள் – என்றார்.

## வாகனங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் வேட்பாளரின் பிரத்தியேக வாகனம் தவிர்ந்த, பஸ்கள், ஓட்டோக்கள் உள்ளிட்ட வேறு வாகனங்களில் இவ்வாறான விடயங்களைக் காட்சிப்படுத்துவது, தேர்தல் சட்ட விதிகளுக்கமைய குற்றமாகும். அவற்றை அகற்றுவதற்குப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தெரிவித்துள்ளார்.

## வாக்களிக்க முன்னர் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியவை...

# ஏன் ஒரு மாற்று அரசியல் அணி தேவை?

**எமது அன்புக்குரிய மக்களே!**

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கோ அல்லது இன அழிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் துன்ப, துயரங்களை போக்குவதற்கோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் கடந்த 10 ஆண்டுகளில் எடுக்கவில்லை. இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும், இன அழிப்பு குற்றவாளிகளை பாதுகாக்கும் வகையிலுமே உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது கூடுதலான கவனத்தையும், நேரத்தையும், வளங்களையும் செலவிட்டுள்ளது. எந்தக் கட்சியையும் விமர்சனம் செய்வது எமது நோக்கம் அல்ல. ஆனால், எமது மக்கள் இம்முறை தேர்தலில் மிகுந்த விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த 11 வருடங்களில் என்ன செய்திருக்கின்றது என்பது தொடர்பில் சில விடயங்களை கீழே பட்டியலிட விரும்புகின்றோம்.

1. ஐ. நா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை மேலும் வலுப்படுத்தி இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்படுத்துவதற்கு மிகவும் பலம்பொருந்திய, வாய்ப்புக்கள் நிறைந்த எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்தபோதும் அவ்வாறு செய்யாமல் போர் குற்றத்துக்கான சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாக பிரசாரம் செய்ததுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்துக்கு கால அவகாசத்தை பெற்றுக்கொடுத்து இறுதியில் அதனை நீர்த்துப்போக செய்துள்ளது. இதன்மூலம் இன அழிப்பு குற்றவாளிகளை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தண்டனையில் இருந்து பாதுகாத்ததுடன் பரிகார நீதி ஊடாக தீர்வினைப் பெறுவதற்கான வாய்ப்பினையும் மழுங்கடித்துள்ளது.
2. முள்ளிவாய்க்கால் இனஅழிப்பை இனஅழிப்பு இல்லை என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்புரை செய்தமை.
3. 1990ல் பாதுகாப்பு கருதி விடுதலைப்புலிகளினால் யாழ் குடாநாட்டில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதை இன அழிப்பு என்று வாதிட்டமை.
4. வட-கிழக்கிலிருந்து முற்றான இராணுவ வெளியேற்றத்தை சர்வதேச சமூகமும் மனித உரிமைகள் அமைப்புக்களும் வலியுறுத்தி வந்த நிலையில் தனியார் காணிகளிலிருந்தான இராணுவ வெளியேற்றம் போதுமென்று கூறியமை.
5. கிழக்கு மாகாண சபையை வென்று முஸ்லிம் காங்கிரசிடம் கையளித்தமை.
6. வடக்கு மாகாண சபை இனவழிப்புத் தீர்மானம் நிறைவேற்றியமைக்காக தொடர்ந்து செயற்படவிடாமல் முடக்கியதுடன் முதலமைச்சர் நிதியத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்காமை.
7. வவுனியா வடக்கு முதல் முல்லைத்தீவு வரை நல்லாட்சியென்றபெயரில் பாரிய சிங்கள குடியேற்றங்களும் இராணுவ குடியேற்றங்களும் ஏற்படுத்தப்படவும் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதற்கும் உடந்தையாக இருந்தமை. இந்த குடியேற்றங்களை நிறுவுவதற்காக யுத்தம் நடைபெற்ற காலங்களை விடவும் மிகவும் பெருமளவு நிதி பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் அவற்றுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பு பாரிய ஒரு குற்றத்தை இழைத்துள்ளமை.
8. நாவற்குழி, வவுனியா வடக்கு வெடுக்குநாரிமலை, திருக்கேதீஸ்வரம், கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், வலிகாமம் ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதற்கும் எமது தலைநகர் திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு பௌத்த கோவில் கட்டப்படுவதற்கும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு எந்த எதிர்ப்பையும் வெளியிடாமை.
9. ஓர் (இலங்கை) அரசு செய்யும் போர்குற்றத்தை மூடி மறைப்பதற்காக இன அழிப்பில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காகப் போராடிய இளைஞர்கள் செய்த நடவடிக்கைகளை அவற்றுடன் ஒப்பிட்டு சமன் செய்தமை.
10. இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்குள் கொண்டு சென்று இனப்பிரச்சினை தீர்வுக்கான பிரத்தியேகமான பேச்சுவார்த்தை வழிமுறைகளை இல்லாமல் செய்தமை.
11. வராத ஒரு தீர்வுக்காக தமிழ்த் தேசிய கோட்பாடுகளான வடக்கு கிழக்கு இணைப்பு, இறைமை என்பவற்றை கைவிட்டும் ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்திற்கு முதல் உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தியமை.
12. புலி நீக்க, உரிமை நீக்க அரசியலை மேற்கொண்டு 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் உரிமை அரசியலை சலுகை அரசியலாக மாற்றியமை.
13. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்கள் இலங்கையின் சிங்கக் கொடியை நிராகரித்தும் சுதந்திர தினத்தை கரி நாளாக தொடர்ந்து பிரகடனப்படுத்தியும் வந்த நிலையில் எதிர்க்கட்சி தலைமைப் பதவியை தக்க வைப்பதற்காகவும் சலுகைகளுக்காகவும் சிங்க கொடியை ஏறு கையில் ஏந்தியதுடன் சுதந்திரதின நிகழ்வுகளிலும் கலந்துகொண்டமை.

### ஏன் நீங்கள் தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்?

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் கொள்கை அடிப்படையிலும் புதிய அணுகுமுறையின் அடிப்படையிலும் 5 கட்சிகள் ஒன்றுசேர்ந்து உருவாக்கியுள்ள ஒரு பெரும் கூட்டுக்கட்சி தமிழ் மக்கள் தேசியகூட்டணி ஆகும். ஒழுக்கம், நேர்மை, துணிவு கொண்ட மற்றும் லஞ்சம், சலுகைகளுக்கு விலைபோகாத அரசியல் தலைமைத்துவத்தை நீதியரசர் விக்னேஸ்வரன் கடந்த 5 வருடங்களாக வழங்கிவருகின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சலுகை அரசியலுக்கும் ஏமாற்றுக்களுக்கும் எதிராகவும் அரசாங்கங்களுக்கு அடிபணியாமலும் அவர் துணிச்சலாக மேற்கொண்ட நடவடிக்கைகளே தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டமும் இனஅழிப்புக்கான நீதிக்குமான போராட்டம் அஸ்தமித்துவிடாமல் தொடர்ந்தும் உயிர்ப்பாக பேணப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதற்குக் காரணமாகும். அத்தகைய ஒரு தலைவரின் கீழேயே இறுக்கமான ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணி செயற்பட்டுவருகின்றது. வேட்பாளர்கள் தமது சொத்துவிபரங்களை வெளியிடுவது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மாதாந்த படிகளில் குறைந்தது 10 சத வீதத்தினை பொதுமக்களின் நலன்களுக்கு வழங்குவது உட்பட பல்வேறு நிபந்தனைகளை இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை உள்ளடக்கியிருக்கிறது.

### எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்?

1. சட்டப்படி தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation), இலங்கையின் வடக்கு கிழக்கு அவர்களின் மரபுவழி தாயகம் (Traditional Homeland), அவர்கள் சர்வதேச சட்டங்களின் கீழ்சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் (Right of Self Determination) என்பவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையுடனான உயர்ந்த மட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நோக்கமாகும். ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்றும் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது என்றும் ஜனாதிபதி மிகவும் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்துவதை தவிர எமக்கு வேறு எந்தத் தெரிவுமே இல்லை. எரித்திரியாவில் 1990ஆம் ஆண்டு தொடங்கியதுமுதல் பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து, கனடாவில் கியூபெக், கிழக்கு திமோர், சூடான் என்று பல நாடுகளில் பிணக்குகள் மற்றும் தேசிய இனங்களின் அதிகாரங்களை தீர்மானித்துக்கொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை சர்வதேச சமூகம் நடத்தியிருக்கின்றது. ஆகவே, இலங்கையில் எத்தகைய ஒரு தீர்வு தமக்கு வேண்டும் என்பதை, தமிழ்ப் பேசும்மக்கள் தீர்மானிக்கும் வகையில் சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று கோரிதமிழ் மக்கள் தேசிய கூட்டணி அரசியல், ராஜதந்திர ரீதியாக அர்ப்பணிப்புடன் செயற்படும். மேலே, நாம் குறிப்பிட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இந்த சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் தெரிவுகளில் ஒன்றாக இருக்கும்.
அதேவேளை, இறுதி தீர்வை எட்டும்வரை யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீள கட்டியெழுப்புவதற்காக ஒரு இடைக்கால தீர்வினை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன் ஏற்படுத்துவதற்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.
2. இனஅழிப்பு நடைபெற்று 10 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் போர்க்குற்றம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள்மற்றும் இனஅழிப்புகுற்றங்கள் ஆகியவற்றுக்கு நீதி கிடைக்கவில்லை. அதேசமயம், ஐ. நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட 30/1 கருத்தொருமித்த தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கையிடம் இருந்து நீதியையும் நியாயத்தையும் எதிர் பார்க்க முடியாது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு சர்வதேச நாடுகளை வலியுறுத்துவதே எமக்கு எஞ்சியுள்ள ஒரே வழி. இதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மேற்கொள்ளும்.
3. வடக்கு கிழக்கில் வாழ்ந்துவரும் 90,000 விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். இதற்கு முன்னோடியாக "தேவைகள் மதிப்பீடு" ஒன்றை விதவைகள் மத்தியில் நாம் விரைவில் நடத்த இருக்கின்றோம்.
4. காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். இவர்களின் பிரச்சினைகளைக்கையாளும் வகையில் சட்டவல்லுனர்கள் குழு ஒன்றை நாம் அமைக்க இருக்கின்றோம். இன அழிப்பு தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும்பொழுதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். இதனடிப்படையில், சர்வதேச விசாரணை ஒன்றை இயன்றளவு விரைவாக கொண்டுவருவதற்கு நாம் பாடுபடுவோம். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிரச்சினைகளை அறிந்து புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.
5. பல வருடங்களாக சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பொருட்டு சட்ட வல்லுநர்கள் குழு ஒன்றை விரைவில் அமைத்து செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்வோம். குறிப்பாக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பாடுபடுவோம். அதே சமயம் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் எமது உறுப்பினர்கள் ஐ. நா, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவார்கள்.
6. உலகில் உச்சளவு இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வடக்கு- கிழக்கு தொடர்ந்து காணப்படுகின்றது. தனியார் காணிகளில் இருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 1983ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த நிலைகளுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற மட்டத்திலும் ஐ.நா. மட்டத்திலும் நாம் வலியுறுத்துவோம். போரின் போது இராணுவத்தினர் தொகை பெருமளவு அதிகரித்துள்ளமை தெரிந்துள்ளதால் அவர்களைச் சிங்களப் பிரதேசங்களுக்கு அனுப்பக் கோருவோம்.
7. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இங்கு நடைபெறும் நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் பாரிய மனித உரிமை மீறல்களாகும். ஐ. நா, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் கவனத்தை இந்த விடயத்தில் ஈர்த்து அவர்கள் இதுதொடர்பில் ஆய்வுகளையும் கண்காணிப்பு அறிக்கைகளையும் வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க நடவடிக்கைகளை எடுப்போம். அதேவேளை, இலங்கை சட்டத்துக்கு உட்பட்ட ரீதியில் மேற்கொள்ளக்கூடிய அனைத்து முயற்சிகளையும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் எடுப்போம். குறிப்பாக, ஐ. நா மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவதற்கும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் ஐ. நா விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம்.
8. தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் நாம் கூடுதல் கரிசனையுடன் செயற்படுவோம். இதுதொடர்பில் பல்வேறு கட்டமைப்பு ரீதியான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். இவற்றை நிறைவேற்ற அரசாங்கத்திடம் இருந்து பெறக்கூடிய அனைத்து வளங்களையும் நாம் பெறுவதுடன் தமிழகம், புலம்பெயர் மக்கள் ஆகியோரின் உதவிகளை ஒன்றிணைக்க இருக்கின்றோம். தமிழ் நாட்டுடனான உறவுகளை வலுப்படுத்தி எமது பகுதிகளில் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நாம் விசேட கவனம் செலுத்துவோம். எமது எல்லா முயற்சிகளும் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
9. 1958ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு கிழக்கு பகுதிகளில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவு ஸ்தூபிகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.
10. சர்வதேச ரீதியில் எல்லா நாடுகளுடனும் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்தவும் நாம் தொடர்புகளைப் பேணுவோம். இதில் இந்தியா முக்கியமானது. இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையினையும் உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வடக்கு கிழக்கின் சமூகபொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். குறிப்பாக, பலாலி விமான நிலைய விஸ்தரிப்புமற்றும் இந்தியாவிற்கும் காங்கேசன்துறை, திருகோணமலை, தலைமன்னார் ஆகியவற்றுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆகிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி நடவடிக்கைகளை எடுக்கும்.


### இறுதியாக ஒரு வேண்டுகோள்

சுயநலம் மற்றும் சலுகைகள் ஆகியவற்றுக்கு அப்பால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சகல தோல்விகளுக்கும் தவறுகளுக்கும் முக்கியமான ஒரு காரணம் ஒரு சிலர் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப மொத்தத் தமிழ் மக்கள் சம்பந்தமானமுடிவுகளை எடுத்து செயற்பட்டமை ஆகும். அந்தத் தவறை நாம் விடப்போவதில்லை. அதனால் தான் எமது செயற்பாடுகள் நிறுவன ரீதியான கட்டமைப்புகளின் ஊடாக நன்கு ஆராயப்பட்டு முன்னெடுக்கப்படவிருக்கின்றது. நிறுவனமயப்படுத்தல் என்னும்பொழுது அரசியல் தீர்வு விடயம் பற்றியதானதாகவுஞ்சரி, சமூக, பொருளாதார மேம்பாடு சம்பந்தமானதுஞ் சரி எதுவானதாக இருந்தாலும் அவற்றுக்கான செயற்பாடுகளின் நிலைத்துநிற்கும் தன்மையும் உபாயங்களும் தனி ஒருவரில் தங்கி இருக்காமல் அந்த நோக்கங்கள் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கூட்டுப்பொறுப்பிலும் பற்றுறுதியிலும் தங்கி இருத்தலாகும். இதன் அடிப்படையில், உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் புத்திஜீவிகளை ஒருங்கிணைத்து நிலத்திலும் புலத்திலும் கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். நாம் மேலே குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே பெற்றுத்தரும்.

ஆகவே, வடக்கு கிழக்கில் வாழுகின்ற எமது அன்புக்கினிய மக்களே! தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற விதியை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமைகின்றது. உங்கள் வாக்குகள் தான் அந்த விதியை எழுதப்போகின்றன. நீங்கள் எழுதும் விதி வடக்கு- கிழக்கில் "மீனாட்சி" மலர்வதற்கானதாக இருக்கட்டும்! நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் உரிமைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கான எமது பற்றுறுதியில் இருந்து தளரமாட்டோம். தயவுசெய்து "மீனுக்கு" புள்ளடி இடுங்கள். உங்களின் வாக்குகள் எமது தமிழ் மக்களின் அரசியல் சமூக, பொருளாதார மாற்றுக்கும் எமது கலாசார அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கும் வலுவூட்டுவதாக அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவதாக அமையட்டும்! நீதியான் விக்னேஸ்வரன் அவர்களை பலப்படுத்துவதாக அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்றமுறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அமையட்டும்!

இப்படிக்கு,

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் பேசுபொருள் – 13 ஒழிப்பு

தென்னிலங்கையைப் பொறுத்தவரை நாடாளுமன்றத் தேர்தலுக்கான பேசு பொருள் ஏறத்தாழ தயாராகி விட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் ஆகியவைதான் இம்முறை தேர்தலில் தெற்கில் பேசுபொருள்களாக இருக்கும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், வழமை போல தென்னிலங்கைத் தேர்தல்களில் பேரினவாத மேலாண்மைத் திமிர்த்தனத்தைக் காட்டுவதற்கான உள்ளடக்கத்தை 19 ஆவது திருத்தம் கொண்டிருக்காதமையினாலும் -

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட பேரினவாதப் பேச்சுகள் அந்த மேலாண்மைத் திமிரில் இருக்கும் தரப்புகளுக்கு, இந்தத் தேர்தலின் பொது மேடைகளில் பிரதான பேசு பொருளாகப் பேணுவதற்குப் போதிய தீனியாக அமையாததினாலும் -

பேரினவாதத் தளத்திற்கான - தாளத்திற்கான - வேறு புதிய பேசு பொருளைத் தேட வேண்டிய கட்டாயம் இந்தப் பேரினவாத அதிகாரத் தரப்புகளுக்குத் தேவைப்பட்டது.

வளமாகவும், வசதியாகவும், வாய்ப்பாகவும் அது கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

அது - அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மீதான தாக்குதலாகும்.

இந்த விடயத்தைப் பேரினவாத மேலாண்மையின் உச்சியில் நின்று கொண்டு கொக்கரிக்கும் மொட்டுத் தரப்பு தேடிப் பிடித்துக் கையில் எடுத்திருப்பதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று - 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழர் தரப்புகளின் நிலைப்பாடு.

அடுத்தது - அதே திருத்தம் தொடர்பில் ரணில் தலைமையிலான ஐ.தே. கட்சி மற்றும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய பிரதான எதிர்க்கட்சிகள் பகிரங்கமாகக் கொண்டிருக்கும் கருத்து.

இந்த இரண்டையும் சாதகமாகப் பயன்படுத்தி, தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் உசுப்பேத்தலை மேற்கொள்ளவும் அதன் மூலம் முழு அளவில் பௌத்த, சிங்கள வாக்குகளை வாரி அள்ளிக் கொள்ளவும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மீதான அரசியல் ரீதியான தாக்குதல் தமக்குப் பெரும் அனுகூலமாக இருக்கும் என்று ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சித் தரப்பு கருதுகின்றது.

முதலில் பிரிவினையையும், பின்னர் இப்போது சமஷ்டியையும் வலியுறுத்தி நிற்கும் தமிழர் தரப்புகள், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளையாவது முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி வரும் நிலையில் -

இந்தியா தனது இராணுவத்தை அமைதிப் படை என்று பெயரில் அனுப்பி, கொழும்பு அரசு மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகித்து, வல்வந்தமாக இலங்கை அரசமைப்பில் திணித்ததே 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்ற கருத்து நிலைப்பாடு தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஆழமாக ஊன்றி நிற்கையில் -

இந்த 13 ஆவது திருத்தத்தை அடியோடு ஒழிப்பது என்ற கோரிக்கையை முன்வைத்து, அதற்காக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் வழங்குங்கள் என்று வேண்டினால் அது தென்னிலங்கை மன நிலையில் ஆழமான அதிர்வுகயைம், பெரு வரவேற்பையும் பெறும் என்று மொட்டுத் தரப்பு கனகச்சிதமாகக் கணக்கிடுகின்றது.

அதுவும், சிறுபான்மையினரின் வாக்குகளையே பெரிதும் நம்பியிருக்கும் பிரதான எதிர்க் கட்சிக்கான ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாடு எடுத்திருக்கின்றமை, மொட்டுத் தரப்பைப் பொறுத்தவரை பழம் நழுவிப் பாலில் விழுந்த கதைதான்.

இந்தியாவினால் வல்வந்தமாக - நெருக்குவாரங்கள் மற்றும் அழுத்தங்களினால் - இலங்கை அரசமைப்புக்குள் கட்டாயப்படுத்திப் புகுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை அடியோடு அகற்றுவதன் மூலம், நாட்டின் தனித்துவ இறைமையைப் பிரதிபலிக்கும் அரசமைப்பை உறுதிப்படுத்தப் போகின்றோம், 13 ஆவது திருத்தத்தின் மூலமான பொலிஸ் மற்றும் அதிகாரங்களைப் பிரயோகிப்பதன் வாயிலாகத் தமிழர் தரப்பு இலங்கைத் தீவின் இறைமைக்கு சவால் விடுவதற்கு இருக்கும் வாய்ப்பை அடியோடு அடித்து மூடப்போகின்றோம் என்றெல்லாம் இனவாதப் பிரசாரத்தை வசமாக எழுப்புவதற்கு இந்தப் பேசு பொருள் மொட்டுத் தரப்புக்கு மிகமிக வசதியான விவகாரமாக இருக்கப் போகின்றது என்பது பெரும்பாலும் நிச்சயமாகும்.

தேர்தல் வெற்றிக்காக இத்தகைய தீவிரப் போக்கு நிலைப்பாடு ஒன்றைத் தனது வியூகமாக வகுத்து, அதை மொட்டுக் கட்சி முன்னெடுத்தால் - பிரதமர், ஜனாதிபதி போன்றோரும் அதே நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பிரதிபலிக்கத் தொடங்கினால் - 13 ஆவது திருத்தத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்ற கோஷத்தை இந்தத் தேர்தலின் பிரதான பேசு பொருளாக ஆளும் தரப்பு முன்வைத்தால் - இராஜதந்திர ரீதியில் இந்தியத் தரப்பில் இருந்து சில, பல நெருக்குவாரங்களை கொழும்பு சந்திக்க வேண்டியே நேரும்.

தேர்தல் வெற்றிக்காக அத்தகைய நெருக்குவாரத்தை எதிர் கொண்டு முறியடிக்கலாம் என்ற உறுதியில் ராஜபக்ஷக்கள் இருக்கலாம்.

அப்படி நேரும்போது இந்தியா என்ன செய்யப் போகின்றது என்பதைப் பார்க்கலாம்.

# மொட்டுக்கு மூன்றில் இரண்டு கிட்டினால் ஜனநாயகம் சாகும்

## எச்சரிக்கின்றார் மங்கள சமரவீர



தனக்கும் இலங்கை ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு இருப்பதாகக் கூறியுள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மொட்டுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிட்டினால் ஜனநாயகம் சாகும் என்றும் எச்சரித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற அரசியலில் இருந்து மட்டுமே தாம் விடைபெறுகிறார் எனக் கூறிய அவர் நாடு பல பகுதிகளில் இன்னும் முன்னேறவில்லை என்றார்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தலைவர்களும் ஒரு நல்ல நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இருப்பினும், அவர்களில் எவரும் தங்களைச் சுற்றியுள்ளவர்களை எதிர்ப்பதற்கான வலிமையைக் கொண்டிருக்கவில்லை என்று சமரவீர கூறினார்.

இலங்கையின் மிகச்சிறந்த ஜனாதிபதியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். எனினும் துரதிர்ஷ்டவசமாக ஆதரவை பெறவில்லை என மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ குறித்து கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் -

ராஜபக்ஷவும் நல்ல நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டார், போர்வீரர்கள் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, அவரும் அதிக அதிகாரத்தை விரும்பினார்.

இலங்கை நாடாளுமன்றம் படிப்படியாக திருடர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் மூன்னை கொள்ளைக்காரர்களுக்கான குகையாக மாறி வருகிறது என்றும் புதிய பாதாள உலகமாக மாறி வருகிறது. என்றும் முன்னாள் அமைச்சர் குறிப்பிட்டார்,

மொட்டுக் கட்சி ஒருபோதும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைச் சொந்தமாகப் பெற முடியாது என்று குறிப்பிட்ட மங்கள சமரவீர அவர்கள் அதை அடைந்தால் அது இலங்கையில் ஜனநாயகத்தின் முடிவாக இருக்கும் என்றார்.

# மனநலம் பாதிப்புற்ற 184 பேர் வடக்கில் ஆசிரியப் பணியில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 10

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகறளில் கற்பித்தல் பணியில் உள்ள ஆசிரியர்களில் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் என சான்றிதழ் வழங்கப்பட்டவர்களை விசேட மருத்துவ குழுவின் முன்பாக பரிசோதனைக்கு உட்படுத்த மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் தற்போது பணியில் உள்ள ஆசிரியர்களில் 184 பேர் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பித்து கற்பித்தல் பணி இன்றி சும்மா உள்ளனர். இவர்களினால் பாடசாலைகளில் அவர்களின் இடத்துக்கு மாற்று ஆளணியும் ஏற்படுத்த முடியாமல், அதேநேரம் கல்வி அமைச்சின் நிதியும் விரயம் ஏற்படுகின்றது. இதனால் கல்வி நிர்வாகத்திற்கு இவ்விடயம் பெரும் இடையூறாகவே காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த 184 ஆசிரியர்களில் சுய விருப்பின் பெயரில் முற்கூட்டியே ஓய்வு பெற்றுச் செல்ல விரும்புபவர்களை ஓய்வூதியத்துடன் ஓய்வு பெற்றுச் செல்ல வழி ஏற்படுத்தவும், ஏனைய ஆசிரியர்களைக் கல்வி அமைச்சு நியமிக்கும் மருத்துவக் குழுவிற்கு முன்பாகத் தோன்றி அவர்களின் நிலைமை தொடர்பில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அதற்கு ஏற்ப முடிவு எட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இவ்விடயம் ஆளுநரின் ஒப்புதலிற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கேப்பாப்பிலவில் கதறக்கதற மகளை கத்தியால் வெட்டிய கொடூரத் தந்தை!

தந்தையின் கத்தி வெட்டுக்கு இலக்காகி 5 வயது சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமுற்ற சிறுமி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறைத் தொடர்ந்து தனது மகளைத் தந்தை சரமாரியாகக் கத்தியால் வெட்டியுள்ளார்.

சிறுமி கதறக்கதற இந்த வெறியாட்டத்தை தந்தை மேற்கொண்டுள்ளார்.

சிறுமியின் தந்தையான 28 வயதுடைய நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் கத்திக் குத்து

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் மீது நேற்றுப் பிற்பகல் கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த அந்நபர் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இந்தஅசம்பவம்தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

# கோட்டா, மஹிந்தவை மிக மோசமாக விமர்சித்து முஸ்லிம்களை தவறாக வழி நடத்த சிலர் முயற்சி!

## அவதானமாக இருக்குமாறு உவைஸ் வேண்டுகோள்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி, பிரதமரை மிக மோசமாக விமர்சித்து முஸ்லிம் சமூகத்தை அபகீர்த்திக்குள்ளாக்கிய சில அரசியல் சக்திகள் முஸ்லிம் வாக்கு வங்கியை சூறையாடுவதற்கு தவறாக வழிநடத்தப்பட்டனர். அதன் மூலம் சமூகம் கைகளை சுட்டுக்கொண்டுள்ளது. மீண்டும் ஒரு தடவை கையைச் சுட்டுக்கொள்ள முடியாது என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முஸ்லிம் சம்மேளன தேசிய அமைப்பாளர் ஏ. எல்.எம். உவைஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முஸ்லிம் சமூகம் தேசியக் கட்சிகளிலிருந்து விலகி நிற்பதால் எமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்க முடியாது. முஸ்லிம்கள் தனிமைப்படுவதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளைச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அடுத்த பத்தாண்டுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசும் பதவியில் இருக்கப்போவதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த ஆட்சியில் முஸ்லிம்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் களமிறக்கப்பட்டுள்ள எட்டு வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்து தேசியப் பட்டியல் மூலம் வழங்கப்படவுள்ள இரண்டு எம். பி.க்களுடன் பத்து பேரும் தெரிவாவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் ஆதரவை வெளிப்படுத்த வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்தை பகைத்துக்கொண்டுதம்மால் எதனையும் சாதிக்கவியலாது. பெரும்பான்மை இனத்தை எமது நேச சக்திகளாக அரவணைத்துச் செயற்பட வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்து எட்டு மாதங்களில் ஒரு தடவையேனும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகப் பேசியுள்ளாரா? இந்தநிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் 5ஆம் திகதி நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போது முஸ்லிம்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம்கள் கூடுதல் பயனை அடைந்துகொள்ள முடியும் – என்றார்.

## களனி பல்கலை 4ஆம் வருடம் ஜூலை 13ஆம் திகதி ஆரம்பம்

களனி பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகள், கணனி மற்றும் தொழில்நுட்ப பீடங்களுக்கான நான்காம் வருட மாணவர்களுக்கே கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பீடங்களைச் சேர்ந்த விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் அனைவரும், எதிர்வரும்12ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணிக்குள் விடுதிகளுக்கு வருகை தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஹெரோயினுடன் 3 பெண்கள் கைது

### தோட்டாக்கள், செய்மதி தொலைபேசி மீட்பு

ஹுங்கம பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்கள் மூவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 'பட்ட அத' பிரதேசத்திலும், நிதஹஸ்கம பிரதேசத்திலும் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் ஒரு பெண்ணிடமிருந்து 47 கிராம் 5 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றைய பெண்ணிடமிருந்து 4 கிராம் 490 மில்லிகிராம் ஹெரோயினும், மூன்றாவது பெண்ணிடமிருந்து ஒரு கிராம் 120 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு 09 மில்லிமீற்றர் வகை துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் தோட்டாக்கள் 02, மெகசின் 01, படகுகளுடன் தொடர்பை ஏற்படுத்தும் செய்மதித் தொலைபேசி 01, கையடக்கத் தொலைபேசிகள் 04 ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

பட்டஅத மற்றும் நிதஹஸ்கம பிரதேசங்களைச் சேர்ந்த 32, 28, 33 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம், ஹுங்கம பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## சாத்தான்குளம் விவகாரம்

# கோவில்பட்டிக் கிளைச் சிறைக்கு சென்று நீதித்துறை நடுவர் மறுபடியும் விசாரணை!



சாத்தான் குளத்தைச் சேர்ந்த தந்தை, மகன் கொலை வழக்கு தொடர்பாகக் கோவில்பட்டி கிளைச் சிறையில் குற்றவியல் நீதித்துறை நடுவர் பாரதிதாசன் நேற்று விசாரணை மேற்கொண்டார். சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் (58), அவரது மகன் பென்னிக்ஸ்(31) ஆகியோர் கடந்த மாதம் 19ஆம் திகதி சாத்தான்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் கோவில்பட்டிக் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, உடல் நிலை பாதிக்கப்பட்டு அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் பாரதிதாசன், ஏற்கெனவே, கோவில்பட்டி கிளைச் சிறை, சாத்தான்குளம் காவல் நிலையம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார்.

இந்நிலையில் நேற்றுக் கோவில்பட்டி கிளைச் சிறைக்குக் குற்றவியல் நீதித்துறை நடுவர் பாரதிதாசன் சென்றார்.

அங்கு தந்தை, மகன் இறப்பு தொடர்பாக, அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப் பார்வையிட்டு சிறைத்துறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்தினார் எனக் கூறப்படுகிறது.

# 'சமுத்திரசேது திட்டம்' முடிவு 4ஆயிரம் பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் காரணமான முடக்கத்தால் நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இந்தியர்களைக் கடல்மார்க்கமாக அழைத்து வருவதற்காகச் செயற்படுத்தப்பட்ட சமுத்திர சேது திட்டம் நிறைவடைந்தது என்று இந்தியக் கப்பற்படை அறிவித்தது.

மே மாதம் 5ஆம் திகதி தொடங்கிய இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 3 நாடுகளில் இருந்து 4 ஆயிரம் இந்தியர்கள் நாட்டுக்குத் திரும்ப அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கடற்படை வெளியிட்ட அறிவிப்பில், இந்தத் திட்டத்தில் இந்தியக் கடற்படையின் ஜலஸ்வா, ஐராவத், ஷர்துல் மற்றும் மாகர் ஆகிய கப்பல்கள் ஈடுபட்டன. ஏறக்குறைய 55 நாள்களாக நடந்த மீட்புப்பணியில் கப்பல்கள் 23 ஆயிரம் கிலோமீற்றர்கள் கடல்வழியாகப் பயணித்துள்ளன.

இதில் 5 கப்பல்கள் மாலைதீவுகளில் மாலேவுக்கும், ஈரானின் பந்தர் அப்பாஸ் நகருக்கு இரண்டு கப்பல்களும், இலங்கையின் கொழும்பு நகருக்கு ஒரு கப்பலும் சென்றன. கூடுதலான காற்றோட்டம், பாதுகாப்பான சூழல் காரணமாக, கப்பல் மற்றும் கடற்படையினர் மீது குறிப்பிடத்தகுந்த தாக்கத்தைக் கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ளது.

கப்பல்களின் இயக்க சூழலுக்கு தனித்துவமான மருத்துவ மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளும், கடுமையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

3 நாடுகளில் இருந்து இந்தத் திட்டத்தின் மூலம் 3 ஆயிரத்து 992 இந்தியர்கள் அழைத்து வரப் பட்டுள்ளனர் என்றுள்ளது.





# ஒரு நாளில் 2.87 லட்சம் பேருக்குக் கொரோனா!

## எச்சரிக்கிறது ஆய்வு

கொரோனாவைரஸ்தடுப்பு மருந்து கண்டறியப்படாத பட்சத்தில் இந்தியாவில் தற்போதையநிலை நீடித்தால் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதியிலிருந்து ஒரு நாளைக்கு 2.87 லட்சம் பேருக்குக் கொரோனாத் நோய்த்தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்று அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் இன்ஸ்டிரியூட் ஒவ் ரெக்னோலஜி எனும் பிரபல பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளது.

475 கோடி மக்கள் வாழும் 84 நாடுகளின் தரவை அடிப்படையாகக் கொண்டு கொரோனாவைரஸ்பரவலின் தொற்றுநோயியல் மாதிரியை அந்தப் பல்கலைக்கழகத்தின் ஸ்லோன் ஸ்கூல் ஒவ் மேனேஜ்மென்டின் ஆராய்ச்சியாளர்களான ஹஸீர் ரஹ்மந்தாத், டி.ஒய் லிம் மற்றும் ஜான் ஸ்டெர்மன் ஆகியோர் உருவாக்கினர்.

இந்த நிலையில், இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்குத் தடுப்பு மருந்து ஏதும் கண்டுபிடிக்கப்படாத பட்சத்தில், உலகிலேயே அதிகபட்சமாக இந்தியாவில் 2021 பெப்ரவரி மாதம் முதல் தினமும் 2.87 லட்சம் பேருக்குக் கொரோனாத்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், பத்து நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் அமெரிக்கா, தென்னாபிரிக்கா, இரான், இந்தோனேசியா, பிரிட்டன், நைஜீரியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களை பிடிக்க வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தங்கம் கடத்தல் விவகாரம்

# பிணை கோரினார் ஸ்வப்னா சுரேஷ்!



கேரள மாநில அரசியலில் பர பரப்பை ஏற்படுத்தியுள்ள தங்கக் கடத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஸ்வப்னா சுரேஷ் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சிய அரசின் துணைத் தூதரக முன்னாள் அதிகாரியும், கேரள அரசின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் செயற்றிட்ட முகாமையாளருமான ஸ்வப்னா சுரேஷ் இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் நிலையில் அவர் தலைமறைவாகி உள்ளார். இந்த நிலையில், அவர் முற்பிணை கோரி திருவனந்தபுரம் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அதில், நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்க கடத்தலில் ஈடுபடவில்லை எனக் கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள தூதரகத் தலைவர் கேட்டுக்கொண்டதால் அந்தப் பொதியை வழங்கக் கூறியதாகவும், அதில் தங்கம் இருந்தது தனக்கு தெரியாது என்றும் ஸ்வப்னா கூறி உள்ளார். இந்த மனு நாளை விசாரணைக்கு வரவுள்ளது.

# கொரோனாவுக்கு மத்தியிலும் பயங்கரவாதம் பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டு!

கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியிலும் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றது என்று இந்தியா குற்றம்சாட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் நடந்த கூட்டத்திலேயே தனது அயல்நாடான பாகிஸ்தான் மீது இந்தியா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தது.

பாகிஸ்தான் பன்னாட்டுப் பயங்கரவாதத்தின் மையம் என்றும் பயங்கரவாதிகளின் பாதுகாப்பான அடைக்கலம் என்றும் இந்தியா தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் காணொலியில் பேசிய இந்திய தூதுக்குழுவின் தலைவர் மகாவீர் சிங்வி இது குறித்து மேலும் கூறியதாவது:-

கொரோனா தொற்றுநோயை சமாளிக்க உலகம் முழுவதும் ஒன்று திரண்டு வரும் நேரத்தில், துரதிர்ஷ்டவசமாக, பாகிஸ்தான், எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து வருகிறது. பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக ஆதாரமற்ற மற்றும் தீங்கிழைக்கும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து எங்கள் உள் விவகாரங்களில் தலையிடுகிறது.

இந்தியாவுக்கு எதிராக எல்லையில் பயங்கரவாதிகளை ஊக்குவிக்க நிதி உட்பட அனைத்து வகையான உதவிகளையும் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு அளிக்கிறது. இந்தியாவின் உள்நாட்டு சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய தவறான தகவல்களையும் பாகிஸ்தான் பரப்புகிறது என்று தெரிவித்தார்.

# வெளிநாட்டு முஸ்லிம்களுக்கு அநீதி!

## வைகோ கண்டனம்

சென்னை புழல் சிறையில் இருக்கும் வெளிநாட்டு முஸ்லிம்கள் மீதான வழக்கை முடித்து அவர்களை நாடுகளுக்குத் திருப்பி அனுப்ப மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக, வைகோ மேலும் தெரிவிக்கையில், டெல்லியில் நடைபெற்ற தப்லீக் ஜமாத் மாநாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்துவந்துகலந்து கொண்ட முஸ்லிம்களில் பலர் திரும்பிச் சென்றுவிட்டனர்.

தமிழ்நாட்டில் தப்லீக் ஜமாத் மாநாட்டுக்கு ஒன்பது நாடுகளிலிருந்து வருகை புரிந்த 12 பெண்கள் உள்ளிட்ட 129 நபர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இது தமிழக அரசின் விதி மீறல் ஆகும். சென்னை மாநகராட்சி ஆணையரிடம் தங்கள் இருப்பிடத்தைத் தெரிவித்துவிட்டு, சென்னை மாநகருக்குள் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், சொந்தப்பிணையில் இவர்களை விடுவிக்க நீதிமன்றங்கள் ஆணையிட் டன.

ஆனால், அது நடக்கவில்லை. இப்படிப்பட்டவர்களுக்குப் போதுமான இடவசதியும், காற்று, வெளிச்சம் மற்றும் கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அங்கு இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசின் வழிகாட்டு அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், 40 நபர்கள் தங்கக் கூடிய இடத்தில் 12 பெண்கள் உட்பட 129 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்தால் அவர்கள் வழக்கை முடித்து, அவர்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த வெளிநாட்டினரைக் கெரோனா பரவியுள்ள புழல் சிறையில் அடைத்து வைத்திருப்பதுசட்டப்பூர்வமானது அல்ல. தமிழக அரசு நீதிமன்ற உத்தரவை வெளிப்படையாக மீறி வருகிறது என்றார்.

# எதியோப்பியப் போராட்டத்தில் 239 பேர் சாவு!





கிழக்கு ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் பிரபல பாடகர் கொல்லப்பட்டதற்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 239 ஆக அதிகரித்துள்ளது.

எதியோப்பியாவின் பிரபல பாடகரான ஹஹலு ஹண்டிசா கடந்த மாதம் 29 ஆம் திகதி இனம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவம் உள்நோக்கத்தோடு திட்டமிட்டு நடைபெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரோமியா என்ற இனக்குழுவை சேர்ந்த அந்தப் பாடகரின் கொலைச்சம்பவத்தை அடுத்து அந்த இன மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரோமியா மாகாணத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் இந்த இன மக்கள் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டங்கள் சில பகுதிகளில் வன்முறையாக மாறி வருகின்றன.

இதையடுத்து, போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. மேலும், பல கடைகள் போராட்டக்காரர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டன. வன்முறை காரணமாக உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தொடர்ந்து 10ஆவது நாளாக நடந்து வரும் போராட்டத்தில் இதுவரை 239 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு வன்முறைகள் மேலும் அதிகரிப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது.

## உணவுகளுக்கு இனி அரைவாசிக் கட்டணம் அதிரடிச் சலுகையை அறிவித்தது பிரிட்டன்



பிரிட்டனின் எந்த உணவகத்தில் உணவு உண்டாலும் 50 சதவீத விலைத் தள்ளுபடி வழங்கப்படும் என்று பிரிட்டன் அரசு அதிரடிச் சலுகையை அறிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் முழுதும் திங்கட்கிழமை முதல் புதன் கிழமை வரையான நாள்களில் உணவகங்களில் இருந்து உணவருந்தும் அனைவரும் 50 சதவிகித கட் டணத்தைச் செலுத்தினால் போதும் என்றும் மிகுதி 50 சதவிகிதக் கட்டணத்தை அரசு ஏற்க இருக்கின்றது என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் உட்பட அனைவருக்கும் அதிகபட்சம் 10 பவுண்ட் அளவுக்குத் தள்ளுபடி கிடைக்கும் வகையில் இந்தப் புதிய சட்டத்தைப் பிரிட்டன் அரசு நடைமுறைக்குக் கொண்டுவர உள்ளது. அதாவது நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பமானது 80 பவுண்ட் தொகைக்கு உணவருந்தினால், 40 பவுண்டுகள் மட்டும் செலுத்தினால் போதுமானது. நாட்டின் மொத்த குடிமக்களுக்கும் பயன் தரும் திட்டமிது என்று சேன்ஸலர் ரிஷி சுனாக் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தில் பதிவு செய்யும் உணவகங்கள் வழியாக இது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். பொதுமக்களுக்கு தள்ளுபடியாக வழங்கும் தொகையானது, ஒவ்வொரு உணவகங்களின் வங்கிக் கணக்குகளில் 5 நாள்களுக்குள் அரசு செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவகங்கள், மதுபான விடுதிகள் உள்ளிட்டவையில் பணியாற்றும் 18 லட்சம் பேரின் வேலையை உறுதி செய்யும் திட்டத்தின் ஒருபகுதியாகவே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்காவின் முடிவு தவறு சுட்டிக்காட்டுகிறது சீனா

கொரோனா வைரஸ் பரவலைப் போதுமான கவனத்துடன் தடுக்கவில்லை என்றும், சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்றும் உலக சுகாதார அமைப்பின் மீது அமெரிக்கா குற்றம்சாட்டியது.

அத்தோடு அந்த அமைப்பிலிருந்து விலகுவதற்குரிய முறைப்படியான பணியையும் அமெரிக்கா தொடங்கியுள்ளது. உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறுகிறோம் என்பதற்கான கடிதம் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா சார்பில் அளிக்கப்பட்டுள்ளது.

இதை ஐ.நா. சபையும் உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவின் இந்த முடிவு தவறானது என்று சீனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்துச் சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஷாவோ லிஜியன் கூறும் போது, 'ஒப்பந்தங்களை மீறுதல், அமைப்பிடமிருந்து விலகுதல் போன்றவை அமெரிக்காவின் ஒருதலைப்பட்ச நடவடிக்கையைக் காட்டுகின்றன. உலக சுகாதார அமைப்பு அதிகாரபூர்வ அமைப்பாகும். அமெரிக்காவின் விலகல் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்' - என்று தெரிவித்தார்.



ஈரானின் நடான்ஸ் நகரில் உள்ள நடான்ஸ் அணுசக்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் சேத மடைந்த கட்டடத்தின் காட்சியைக் காட்டும் செயற்கைக்கோள் படம் இது. இது குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட தீ என்றும் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியது என்றும் ஈரான் தெரிவித்திருந்தது.

## ஆய்வுகூடம் மீது விழுந்தது மின்னல்

கொரோனாத் தடுப்பூசி ஆராய்ச்சி நடைபெறுகின்ற ரஷ்யாவிலுள்ள ஆய்வுக்கூடம் ஒன்றின் மீது மின்னல் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் ரஷிய அறிவியல் அக்கடமியின் மெியாகின் அண்ட் ஒவ்சின்னிகோவ் உயிர் வேதியியல் நிறுவனத்தின் ஆய்வுக்கூடமே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்கு உள்ளானது.

ரஷ்யாவின் கொரோனா வைரஸ் பரிசோதனைக் கருவி உருவாக்கப்பட்டுக் கொரோனா வைரஸ் தடுப்பூசி ஆராய்ச்சி நடந்து வருகின்ற அந்த ஆய்வுக்கூடத்தின் மீது நேற்று முன்தினம் இரவு திடீரென மின்னல் தாக்கியது.

இதில் அதன் கூரையில் தீ பிடித்துச் சிறிய சேதம் ஏற்பட்டது. அரை மணி நேரத்தில் அந்த தீ அணைக்கப்பட்டு விட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு காணப்பட்டது. இருப்பினும் ஆய்வுக் கூடத்தினுள் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. அங்கு பணியில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் எந்தவொரு பாதிப்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டோக்கியோவில் 224 பேருக்குத் தொற்று!



ஜப்பானின் தலைநகர் டோக்கியாவில் ஒரே நாளில் அதிகபட்சமாக 224 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதுகுறித்து ஜப்பான் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கையில் -

ஜப்பான் தலைநகர் டோக்கியாவில் இன்று ஒரே நாளில் அதிபட்சமாக 224 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. ஜப்பானில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து கொரோனா மருத்துவ பரிசோதனைகளை ஒரு நாளைக்கு 10ஆயிரம் வரையிரல் அதிகரிப்பதற்கு ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது' என்றனர்.

ஜப்பானில் இதுவரை சுமார் 20ஆயிரத்து 174 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர், 17ஆயிரத்து 331 பேர் குணமடைந்த நிலையில் 980 பேர் சாவடைந்துள்ளனர்.

ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் ஜப்பானில் கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து டோக்கியோ மற்றும் முக்கிய பிராந்தியங்களில் ஊரடங்குக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது. அடுத்த சில நாள்களில் ஊரடங்குக் கட்டுப்பாடு நாடு முழுவதும் விரிவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இரு நாள்களே மாம்பழக் கதை ஓடியது இப்போது அது அழுகி விட்டது போலும்

## அது மஹிந்தருக்கு அனுப்பப்பட்டதேயல்ல என்கின்றார் முன்னாள் எம்.பி. சரவணபவன்

**முன்னாள் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் யாழ் ஊடக அமையத்தில் வைத்து நேற்று முன்தினம் அளித்த பேட்டியின் முதல் பகுதி நேற்றுப் பிரசுர மாகியிருந்தது. எஞ்சிய பகுதி இங்கு இடம்பெறுகின்றது.**

**கேள்வி:-** கடந்த காலங்களில் ஊடக அடக்குமுறைகள், ஊடக சுதந்திரம் குறித்து நீங்கள் பேசியிருக்கின்ற நிலையில் மீண்டும் அவ்வாறான ஊடக நெருக்கடிகள் வருவதாகச் சொல்லப்படுவதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** கடந்த காலங்களிலும் ஊடக அடக்குமுறை இருந்தது. ஆனால் இப்போது இலாவகமாக ஊடக அடக்குமுறையைச் செய்கின்றார்கள். முன்னைய காலத்தில் ஊடக அடக்குமுறையைச் சொல்லி செய்தார்கள். இப்போது சொல்லாமல் செய்து கொண்டு போகிறார்கள். நல்லாட்சி அரசு இருந்த நேரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைச் செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த ஆட்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கூட கொரோனாவை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு எமது மக்களின் அந்த சுதந்திரத்தையும் பறித்தார்கள். இது அடக்குமறை தான்.

இதில் குறிப்பாக இந்த அடக்குமுறை பற்றி பத்திரிகைகளில் எழுதப்பட்டதுதான். பல செய்திகளும் வந்திருந்தன. ஆனால் இந்த அடக்குமுறை பற்றி தெளிவாகப் பார்த்தால் பத்திரிகைகளில் ஒருவரும் கட்டுரை வரையவில்லை. ஏனென்றால் எழுதினால் எங்கே தங்களுக்குப் பிரச்சினை வந்துவிமோ என்று அவர்கள் எழுதவில்லை. ஆக தாங்களாகவே எழுத்தாளர்கள் சுய தணிக்கைக்கு போகின்றார்கள். இல்லாவிடின் இதைப்பற்றி பலதை எழுதியிருப்பார்கள்.

இப்போது நீங்கள் பார்த்தால் ஜூலை 5 ஆம் திகதி எங்களுடைய கரும்புலிகள் தினம். மில்லருடைய தினம். அதற்கு எல்லா இடத்திலும் இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் நான் வடமராட்சி கிழக்கிற்கு போனபோது நான் சென்ற இடத்திற்கு அருகில் பல இடங்களிலும் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது. அதன் அர்த்தம் என்ன என்றால் அங்கு எங்கும் நாங்கள் அதைப் பற்றிப் பேசக் கூடாது என்பது தான்.

புலிநீக்க அரசியலைச் செய்ய அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. அதாவது புலி நீக்கம் மற்றும் தேசிய நீக்கம் என 2 அரசியலைச் செய்யப் போகின்றார்கள். எனவே நாங்கள் இந்த இடத்தில் செய்யக் கூடியது எங்களுடைய துணிவு தொடர வேண்டும். துணிந்து இறங்க வேண்டும். முன்பெல்லாம் இதுவே நடந்திருக்கிறது. இவற்றையயல்லாம் வைத்துக் கொண்டு சகலரும் துணிவாகச் செயற்பட வேண்டும். இதனையே கடந்தகால நினைவுகளும் எங்களுக்கு நினைவூட்டுகிறது.

நீங்கள் எல்லாம் பேனாப் போராளிகள். ஆகவே ஊடக அடக்குமுறை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே துணிந்து செயற்பட வேண்டும். விளைவுகளை எதிர்பார்க்கவேண்டும். இதற்கு எங்களுக்கு பின்புலம் தேவைப்படுகிறது. இதற்கு இந்த ஊடக அமையம் இப்பொழுதிருந்தே சேவை செய்ய வேண்டும். இந்த ஊடக அமையம் சகலரிடமும் தொடர்புகள் கொண்டு இருக்க வேண்டும்.

2014 ஆம் ஆண்டு நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது எமது பத்திரிகையும் உள்ளிட்டு எதிர்த்தார்கள். 40 தடவைகள் தாக்கப்பட்டுள்ளது எமது பத்திரிகை. ஒரு வழக்கு கூட முடிவுறுத்தப்படவில்லை. சுர்வதேச சமூகம் என்ன செய்கிறார்கள்? அவர்களுக்கு எத்தனை கடிதம் எழுதினேன்? எத்தனை முறை அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். ?எத்தனை முறை தூதரகங்களுக்கு போயிருந்தேன்? அவர்கள் கூட இங்கு வந்திருந்தார்கள்.

அது மாத்திரமல்ல. பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் கூட வந்திருந்தார். அவர் தான் சொல்லுவதாகவும், நிச்சயம் நடவடிக்கை எடுப்பதாகவும் எனக்குச் சொல்லிப் போனவர். நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஒரு வழக்கு எடுக்கப்பட்டதா?. குகநாதனை அடித்தார்கள். எத்தனையோ வழக்கு எடுத்தார்கள். கொண்டு போனார்கள் சுவிற்சர்லாந்துக்கு. வழக்கு நடந்ததா என்றால் இல்லை.

எனவே சுர்வதேச சமூகத்துடன் இப்பொழுதே தொடர்பை ஏற்படுத்தி நிலைமைகளை நாங்கள் அறிவிக்கவேண்டும். எங்களுக்கு இங்கே சுதந்திரம் மாத்திரம் இல்லை. நாங்கள் தமிழர்கள். இங்கே உண்மையைப் பேசினால் பாரிய விளைவுகள் ஏற்படும். உங்களுடைய கண்காணிப்பு எங்களுக்கு தேவை. இதைப் பற்றி நீங்கள் அரசுக்கு சொல்ல வேண்டும் என்றெல்லாம் அவர்களிடமிருந்து உத்தரவாதம் எல்லாம் பெறவேண்டும். நீங்கள் சுயமாக சுதந்திரமாக இயங்குவதாக இருந்தால் அந்த உத்தரவாதம் அவசியமானது.

இரண்டாவதாக இங்கே பிழையான மொழி பெயர்ப்புக்கள்தான். அதாவது இங்கிருந்து வெளிப்படும் செய்திகள் தவறாகவே தெற்குக்கு போகின்றன. ஆகவே அவற்றைச் சரிபார்த்து செய்ய வேண்டும். அதிகளவிலான புலனாய்வாளர்கள் போடப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு பயிற்சி வழங்கும் போது கூட நன்றாகப் பேசுவார்கள். ஆனால் அவர்கள் மொழி பெயர்ப்பது முழுமையானது அல்ல. ஆகவே எதிர்காலத்தில் ஊடக அமையம் அதனையும் ஒரு வேலையாகச் செய்ய வேண்டும். ஏனெனில் இப்படியான பாரிய விளைவுகளைத் தடுப்பதற்கு இவற்றையும் செய்ய வேண்டும்.

மேலும் உடனடியாக நாங்களும் முக்கியமான ஒரு செய்திகளாக இருந்தால் அதனை மொழி பெயர்ப்புச் செய்து நாங்களாக அனுப்பி விடுவதும் நல்லது. ஊடகவியலாளர்களுக்கு நண்பர்களை விட எதிரிகள் தான் அதிகம் இருப்பார்கள். அதனால் தான் இவற்றையயல்லாம் நான் சொல்கிறேன். மறைமுகமாக உங்களுக்கு தெரியாத வரும் செய்தியை வாசித்த பின்னர் உங்களுக்கு எதிரிதான். இதிலிருந்த நீங்கள் தப்ப வேண்டும். அது எப்படி என்றால் அதற்கான ஒவ்வொரு பணியையும் நீங்கள் முன்னெடுக்க வேண்டும்.

ஏனெனில் இனிவரும் காலங்களில் அடக்குமுறை அதிகமாக வரப் போகின்றது. இதற்கு மேலால் நாங்கள் வெற்றி பெறவேண்டுமென்றால் நாங்களும் எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கைகஷ்யும் அதனை எப்படி எந்தெந்த முறையில் செய்யலாம் என்று பார்த்து பாதுகாப்புக்களுடன் செயற்பட வேண்டும். இதனையே நான் சொல்லுவேன். முற்றும் படி எங்குதான் கடிதம் எழுதினாலும், எத்தனை பேருக்கு எழுதினாலும் அவர்கள் அதை சந்தோசமாக எடுத்து வைப்பார்கள்.

இதில் ஒரு விடயத்தை நான் சொல்ல வேண்டும். எங்கள் அலுவலகத்திற்கு கைக்குண்டை எறிந்தார்கள். வந்தார்கள்! பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அதே



போல இனிமேலும் கைக்குண்டை எறியமாட்டார் கள், துப்பாக்கி சுடமாட்டார்கள் என்றும் சொல்ல முடியாது. இப்போது துப்பாக்கி எல்லா இடமும் இருக்கின்றது. அது இருக்கிறது ,இது இருக்கிறது என்று சொல்லி எங்கள் மக்களை, எமது இளைஞர்களை மீண்டும் அவர்கள் கைது செய்து கொண்டு சென்று கொண்டிருப்பது ஊடகங்கள் வாயிலாக எங்களுக்கு தெரிகின்றது.

**கேள்வி:-** நடைபெறவுள்ள தேர்தலில் பல கட்சிகளும் 3 ஆசனங்கள் என்று சொல்கின்ற நிலையில் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கிறது?

எங்களுக்கு 7 ஆசனம் கிடைக்கும். அதனைப் பார்க்கலாமா? அது எப்படி என்றால் நாங்கள் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இருக்கிறோம். ஆனால் உள்ளுக்குள் என்னமோ பிரச்சினை என்றாலும் அது வீட்டுக்குள்ள இருக்கின்றதுதான். எல்லோர் வீடுகளிலும் பிரச்சினை இருக்கிறது. அதே போல இங்கும் சில பிரச்சினைகள் உள்ளன. சில பிரச்சினைகள் வெளியில் வரும். சில பிரச்சினைகள் வெளியில் வருவதில்லை. ஆனால் விடயத்தில் நாங்கள் எல்லாம் ஒற்றுமைதான். குறிப்பாக எதை அடைய வேண்டுமோ அந்த இலக்கை அடைய ஒற்றுமையாகத்தான் செயற்படுகிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு இருந்த வாக்குகள் தான் பிரிந்து ரணில்,சஜித் என இரு தரப்பிற்கும் போகப் போகிறது. அதே போல சுதந்திரக் கட்சியை எடுத்தக் கொண்டால் வாசுதேவ நாணயக்கார மற்றும் மொட்டுக் கட்சி என மற்றத் தரப்பிற்கும் போகும்

அடுத்ததாக விக்கினேஸ்வரன் ஐயாவின் கட்சியை எடுத்துக் கொண்டால் அவரின் மூலம் மக்கள் முன்னணிதான். அந்த முன்னணியில் இருந்து வந்தபடியால் அதிலிருந்துதான் பிரிவு வரப் போகிறது. ஒரு பக்கம் பிரிந்துதான் நிற்கிறது. அதே போல டக்ளஸை எடுத்தக் கொண்டால் சந்திரகுமார் ஒரு பக்கம் என பிரிந்துதான் நிற்கிறது.

இவ்வாறான பிரிவுகளைக் கணித்துக் கொண்டுதான் இதனைக் கூறுகிறேன். கூட்டமைப்பு யாரால் உருவாக்கப்பட்டது என்றெல்லாம் தெரியும். எனவே நிச்சயமாக இம்முறை எங்களுக்கு 7 ஆசனங்கள் கிடைக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. இது என்னுடைய கணிப்புதான். இந்தக் கணிப்பு அநேகமாகப் பொய்க்காது என்று தான் நினைக்கிறேன்.

**கேள்வி:-** மஹிந்த காலத்தில் ஊடக அடக்குமுமுறை நடந்ததாகவும் அதற்கான நீதியான விசாரணை நடைபெறவில்லை என்று நீங்கள் கூறுகின்ற நிலையில் அண்மையில் உங்கள் ஊடகம் சார்பில் அவருக்கு மாம்பழம் கொடுத்தத சர்ச்சை குறித்தான உங்கள் கருத்து..?

**பதில்:-** பிரதமருடனான சந்திப்பின்போது பிரதமருக்கு மாம்பழம் கொடுத்தவர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இல்லை. பத்மசீலன் என்பவர் தான் சட்டப்படி பிரதம ஆசிரியர். நீங்கள் எல்லாரும் ஊடகவியாளர்கள். நீங்கள் செய்தி எடுக்கத்தான் வேண்டும். அதே நேரம் உங்களுக்கு நண்பர்கள் இருந்தால் அவர்களுக்கு மாம்பழமோ, பலாப் பழமோ கொண்ட போவீர்கள்தானே.

அதே போல இவர் அங்கு வேலை செய்கிற ஒருவருக்கு கொண்டு சென்றார். அவ்வாறு கொண்டு சென்றதை வெளியில்தான் வைத்தார். உள்ளே கொண்டு செல்ல முடியாது. இவருக்கே அது உள்ளுக்கு வந்தது, கொடுக்கப் போகிறது எதுவும் இவருக்கே தெரியாது. இதனால் இரண்டும் கெட்டான் நிலைதான். இது குறித்து பின்னர் விசாரித்துக் கொண்டு போனால் எவ்வாறு அது செய்யப்பட்டது, புனையப்பட்டது என்பதை நான் இதில் பகிரங்கமாகச் சொல்லவில்லை.

எனவே மாம்பழத்தை ஊடகவியியலாளர் கொடுத்தார். அதற்கும் எனக்கும் சம்மந்தமில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் சரி, உறுப்பினராக வர முதலும் சரி ராஜபக்ஷவைத் தெரியும் எல்லா அமைச்சர்களையும் தெரியும். ?பத்திரிகை என்பது எல்லோருடனும் தொடர்பு கொள்ள வேண்டும். பத்திரிகைக்கும் எல்லாரும் வந்திருக்கிறார்கள். அது தவிர்க்க முடியாதது.

ஆக அவர் தன்னுடைய நண்பருக்கு மாம்பழம் கொண்டு சென்றார். ஆனால் அது பிரதமருக்கு வழங்கப்பட்டதால் செய்தியாக அது பின்னர் ஊடகங்களில் வந்தது. அதனை நான் பார்த்திருந்தேன். அது இரண்டுநாள் முகப்புத்தகங்களில் ஓடியது. ஆனால் அதன் பின்னர் அதைக் காணவில்லை. ஆக இரண்டு நாளில் மாம்பழம் அழுகிவிட்டது. அவ்வளவுதான்.

**கேள்வி:-** புலி நீக்க – தமிழ்த் தேசிய நீக்க அரசியலை அரசாங்கம் செய்வதாக நீங்கள் கூறினீர்கள். ஆனால் அவ்வாறு நீங்கள் சார்ந்த கட்சிதான் செய்வதாக ஏனைய தமிழ்க் கட்சிகள் கூறுகின்றனவே?

**பதில்:-** நாங்கள் ஒருதரும் அப்படி செய்யவில்லை. அவ்வாறு செய்வதாக ஆதாரமும் இல்லை. காகம் இருக்க பனம்பழம் விழுந்ததாக ஒரு கதை உருவாக்கப்பட்டதே ஒழிய, புலி நீக்க – தமிழ் தேசிய நீக்க –அரசியலை எங்கள் கட்சியிலோ எங்கள் கூட்டங்களிலோ ஒருதரும் சொல்லவில்லை. ஆனால் சில நடைமுறைகள் அப்படி ஒரு எண்ணத்தைக் கொண்டு வந்துவிட்டன.

அது யாரோவோ - அதாவது எல்லாரும் இல்லை - ஓராள்தான். அதுவும் நான் சொல்ல மாட்டேன் முழுக்க என்று. நீங்கள் கேட்டதால்தான் இதனைக் கூறுகிறேன். குறிப்பாக ஒரு மரத்தில் குருவிச்சை இருந்தால் மரத்தை வெட்ட முடியுமா? குருவிச்சையைத் தான் வெட்ட வேண்டும். ஆகவே எங்களிற்குள் யாருமே அந்த எண்ணத்தோடு செயற்படவில்லை. ஆனால் அரசாங்கம் செய்கிறதுதான். இப்ப வந்த கோட்டபாய அரசாங்கம்தான் அதிகமாக அதைச் செய்கிறது.

**கேள்வி:-** குருவிச்சையை எனக் கட்சியின் உறுப்பினர் ஒருவரைக் குறி வைத்தா சொல்கிறீர்கள்?

**பதில்:-** நான் அதைப்பற்றி ஒன்று சொல்லவில்லை. நான் யாருக்கும் தேவையில்லாத கருத்துக்களைச் சொல்வதில்லை. இன்றுதான் (இங்கு) வந்துள்ளேன். முதிர்ச்சியாகச் செல்லிவிட்டு செல்வேன். நான் சொன்ன சில விடயங்கள் ஆரோக்கியமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இதேவேளை செயலணியொன்று அமைத்திருக்கிறார்கள். அதற்குரிய அதிகாரங்கள் சரியாகத் தெரியவில்லை. ஆனால் எல்லா அதிகாரங்களும் இருக்கு என்று சொல்கிறார்கள். இந்த இடத்தில் ஒன்று சொல்ல வேண்டும். இந்தச் செயலணிக்கு தமிழ். முஸ்லிம்ம் பிரதிநிதியை போட வேண்டுமென டக்ளஸ் சொல்லியிருந்தவர். ஆனால் அது எதுவும் நடக்கவில்லை. இந்த அரசாங்கத்தினர் யாரையும் போட மாட்டார்கள்.

கடந்த காலத்தில் சுதந்திரக் கட்சியின் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருவருமாக 2 பேர் இங்கு தேசிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தனர். அந்த ஆட்சிக் காலத்தில் இந்த 2 பேருக்கும் அபிவிருத்திக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. எது பலமாக இருக்கின்றதோ அதுக்குதான் அரசு அடிபணியும்.

ஆகவே இம்முறையும் அந்த விடயத்தில் மக்கள் கூட்டமைப்பை தேர்ந்தெடுத்துப் பலமாக அனுப்ப வேண்டும். அனுப்பினால்தான் செய்யலாம். இதனைத் தமிழ் மக்கள் செய்யலாம். அது எப்படி என்றால் நல்லாட்சி அரசாங்கத்திற்கு சிறிசேனா வர வேண்டுமென்று தமிழ் மக்கள் ஒத்துழைத்து முழுமையாகச் செய்யவில்லையா. அதே மாதிரி இங்கேயும் செய்யக் கூடியதும், பலம் பொருந்தியதும் கூட்டமைப்புத்தான் என்பதை மனதில் வைத்து செயற்படுவார்களாக இருந்தால் கூட்டமைப்பைப் பலமாகக் கட்டாயம் அனுப்புவார்கள்.

# இலங்கையில் மீண்டும் கொரோனா தாண்டவம்

## கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்த 57 பேர் இலக்கு

**கொழும்பு, ஜூலை 09**

**இலங்கையில் இன்று ஒரே நாளில் புதிதாக 57 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வந்த வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மற்றும் அதன் ஊழியர்கள் உட்பட 450 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களில் 56 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரி வித்தார்.

நேற்றுமுன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. குறித்த நபர் கடந்த மூன்று மாதக்காலமாக கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட நபராவார்.

அதன்படி, அங்கிருந்த கைதிகள் உட்பட 450 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல், இன்று காலை மாரவில பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண் ஒருவர் இனங் காணப்பட்டார்.

கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஆலோசகராகச் செயற்பட்ட பெண் ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,151 ஆக அதிகரித்துள்ளது.

இன்று மேலும் 12 பேர் குணமடைந்து வெளியேறியுள்ள நிலையில் இதுவரை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,979 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை 11 பேர் யிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாள்வெட்டுக் கும்பல் பாவித்த வீடு முற்றுகை!

## நீர்வேலியில் ராணுவச் சீருடைகள் கைக்குண்டு மற்றும் வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டுத் தாக் குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்கள் தங்கியிருந்து குற்றச்செயல்களில் ஈடுபட்ட வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

நீர்வேலி கரந்தனில் உள்ள அந்த வீட்டின் வாழைத்தோட்டத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று, வாள்கள் மூன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட் டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப் புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கை யில் சந்தேக நபர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பிரதான சந்தேக நப ரான மருதனார்மடம் ஜெகன் அல்லது கைலாயம் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றச்செயலுக்குத் தயாராகப் பயன்படுத்திய வீடு முற்றுகையி டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஷ் எனும் சுற்றுச் சூழல் அதிகார சபை உத்தியோகத்தர் மீதே நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப் பட்டது.

அந்த உத்தியோகத்தர் வழமை போன்று நேற்று காலை கடமைக்காக வந்தபோது, அவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழி மறித்து அவர் மீது தாக்குதலை மேற் கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் , தெரி வத்தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரிவத்தாட்சி அலுவலகம் எனும் ரீதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தன.

இந்நிலையிலையே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வன்முறை கும்பல் மோட்டர் சைக்கிள் வந்து வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிசென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் சிக்கியோரில் இருவர் வேட்பாளர்கள்!

கொழும்பு, ஜூலை 09

சங்குபிட்டி பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சை குழு 03 போட்டியிடும் வேட்பாளர்கள் இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மூவரும் பயணித்த ஓட் டோவும் டிப்பர் வாகனமும், சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் நேற்று மாலை விபத்துக்கு உள்ளாகின.

கிளிநொச்சியில் இருந்து தேர்தல் நடவடிக்கை தொடர்பில் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் கிளிநொச்சிக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோதே அவர்கள் விபத்தில் சிக்கியுள்ளனர்.

விபத்தில் சுயேச்சைக் குழு 03 இன் தலைவரான சுந்தரலிங்கம் செல்வகுமார், வேட்பாளர் யோ.பியதர்சன் ஆகி யோரும், இவர்களுடன் இணைந்து பயணிந்தத. பர்சிகன் என்பவருமே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# சுமந்திரனின் எஸ்.ரி.எவ். பாதுகாப்பு அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் மீது தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருந் தன என்ற சந்தேகத்தில் முன்னாள் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டு அது தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் சுமந்திரனுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு தற்போதைய அரசின் ஆரம்ப நாள்களில் நீக்கப்பட்டு, பின்னர் ஒரு சில நாள்களில் மீள வழங்கப்பட்டது.

நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 5 நடைபெற இருக்கின்ற நிலையில் பல கட்சிகளும் இதில் போட்டியிடுகின்றன.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாகவும் அந்த அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருப்பதாக தேசிய புலனாய்வுப்பிரிவு வழங்கிய அறிக்கைக்கு அமையவும் சுமந்திரனுக்கு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இயக்கச்சிப் பகுதியில் குண்டு தயாரிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி, பாதுகாப்பு அச்சுறுத்தல் நீடிப்பதை சுட்டிக்காட்டியிருந்தது.

வழமையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் ஆறு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுட்டு வந்தனர். இந்நிலையில் தற்போது அதற்கு மேலதிகமாக 10 விசேட அதிரடிப்படையினர் அவரின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்படி தற்போது 16 விசேட அதிரடிப்படையினர் சுமந்திரனின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுமந்திரன் கலந்துகொள்ளும் தேர்தல் பரப்புரைகளுக்கு 5 மோட்டார் சைக்கிள்களில் செல்லும் 10 பேர் கொண்ட விசேட அதிரடிப்படையினர் பிரசாரக் கூட்டம் நடைபெறும் பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றனர்.

# பயங்கரவாதம் மீளுருவாக நல்லாட்சியே வழி செய்தது

## மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை09

நல்லாட்சி அரசு உளவுத் துறையை முடக்கி தகவல்களை மறைத்ததன் மூலம் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் கடுகம்பளை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற சந்திப்பொன்றின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டைப் பயங் கரவாதத் திலிருந்து மீட்டிருந்த போதிலும் கடந்த நல்லாட்சி அரசு நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கு இடமளித்துள்ளது

நல்லாட்சி அரசின் தலைவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்த போதிலும் உளவுத் துறை அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கிடைத்த முன்கூட்டிய எச்சரிக் கையை மறைத்ததன் மூலம் அப்பாவி மக்கள் பலர் உயிரிழக்க நேரிட்டது.

மாவட்டமொன்றை அபிவிருத்தி செய் வதைவிட முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதே எமது பொறுப்பு. குருநாகல் என்பது நான்கு இராச்சியங்கள் இருந்த மிகவும் பலம் வாய்ந்த மாவட்டமாகும். எமக்கு நாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு உள் ளது. ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நாடாளுமன்றமொன்று அவசியம். எப்பொழுதும் ஜனாதிபதி பிரதிநித்துவப்படுத்தும் கட்சியே அரசாங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் – என்றார்.

# சிறைக் கைதிகள் 204 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 09

சிறைக் கைதிகள் 204 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

பொலனறுவை சிறைச்சாலையிலுள்ள 11 கைதிகளும், பல்லேகலை சிறைச்சாலையிலுள்ள 7 கைதிகளும் நேற்றிரவு தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகள் 9 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 2,094 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# உழுந்து, மஞ்சள் இறக்குமதிக்கு உடனடியாக அனுமதி வழங்குக!

**பிரதமரிடம் யாழ். வணிகர் கழகம் கோரிக்கை**

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை09

நாட்டில் மஞ்சள் மற்றும் உழுந்துக்குத் தட்டுப்பாடு தொடரும் நிலையில் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படும் வரையில் இரு பொருள்களிற்கும் உடன் இறக்குமதியினை அனுமதிக்குமாறு பிரதமரிடம் யாழ். வணிகர் கழகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தாக்கத்திற்கு முன்பு மார்ச் மாதம் வரை மஞ்சள் 400 ரூபாவாகவும், உழுந்து 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது அதன் விலைகள் மிக அதிகரித்து மஞ்சள் ஒரு கிலோ 3,000 ரூபாவாகவும், உழுந்து ஒரு கிலோ 600 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

அத்துடன் மஞ்சள் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம். நாட்டில் தற்போது மஞ்சள் போதியளவு உற்பத்தி செய்யப்படவில்லை. மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவை அடையும் வரை மஞ்சளை தடை செய்யாது இறக்குமதிக்கு அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தின் எதிரொலியாக பொது மக்கள் நோய் எதிர்ப்பு சக்தியுள்ள மஞ்சளை அதிகளவில் பாவனை செய்கின்றார்கள். ஆகவே இவ்விடயத்தினையும் கருத்தில் எடுத்து மஞ்சளுக்கான இறக்குமதித் தடையை நீக்கி தாராளமாக மஞ்சள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதே வேளை உழுந்தும் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம். கடந்த மார்ச் மாதம் விற்பனை செய்த விலையிலிருந்து 100 வீதமாக அதிகரித்து சுமார் 600 ரூபா அளவில் அது விற்கப்படுகிறது. தற்போது நாட்டில் உழுந்து உற்பத்தி போதியளவில் இல்லை. அத்துடன் தமிழ் மக்களுடைய பாரம்பரிய உணவு வகைகளான வடை, தோசை, இட்லிப்போன்ற உணவுகளுக்கு இது அத்தியாவசியமானதாகும். அத்துடன், சாதாரண ஏழை மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆகையால் அதன் இறக்குமதித் தடையை நீக்கி பொது மக்களுக்கு இவை குறைந்த விலைக்கு கிடைக்கக் கூடியதான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், நாளுக்கு நாள் இவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்வதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைகின்றார்கள். எனவே மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்களையும் கவனத்தில் எடுத்து பொது மக்களுக்குத் தட்டுப்பாடின்றியும், குறைந்த விலையிலும் மஞ்சள் மற்றும் உழுந்து கிடைக்கத் தாங்கள் ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம் எனப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# 90 அலகுகளுக்கு உட்பட்ட மின்பட்டியலுக்கு 25% கழிவு

## மேலும் சலுகைகளுடன் அடுத்த அமைச்சரவையில் இறுதி முடிவு

கொழும்பு, ஜூலை 10

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, ஏற்பட்ட மின்சாரப் பட்டியல் கட்டணம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வாகப் பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



இன்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போதே இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய, அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் இணைந்து சலுகைப் பொதியொன்றை அமைச்சரவையில் முன்வைத்தனர் என்று அவர் கூறினார்.

இதில், மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3 மாதங்களிலும், 0 - 90 வரையான அலகுகளைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்களுக்கு 25% கட்டணக் கழிவை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த மின்சாரப் பட்டியலைச் செலுத்துவற்கு மேலும் 3 மாத கால அவகாசம் வழங்குவதற்கும் அதில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தாமதமாகக் கட்டணம் செலுத்துவது தொடர்பில் எவ்வித அபராதமும் அறவிடுவதில்லை எனவும், எந்தவொரு காரணத்துக்காகவும் மின் துண்டிப்பை மேற்கொள்வதில்லை எனவும் அந்தச் சலுகைப் பொதியிலுள்ள யோசனையில் உள்ளடங்குகின்றது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சார சபைக்கு நட்டம் ஏற்பட்ட போதிலும் இது தொடர்பில் மிகவும் கடினத்துடன் குறித்த யோசனையை அமைச்சர் முன்வைத்தார்.

இதன் மூலம் 73% ஆனோர் பயனடைவார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆயினும், நேற்று இடம்பெற்ற அமைச்சரவையில் இவ்விடயம் தொடர்பில் மிக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

அந்த வகையில், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் பயன்படுத்தப்பட்ட மின் அலகுகளைப் பார்க்கிலும் எத்தனை அலகுகள் மேலதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கணக்கிடுதல் அல்லது 90 அலகுகள் எனும் எல்லையை 120 அலகுகளாக அதிகரிக்க முடியாதா எனப் பல்வேறு யோசனைகள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையினால் முன்வைக்கப்பட்டன.

எனவே, இதில் மேலும் பல சலுகைகளை இணைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அவை தொடர்பில் அடுத்து அமைச்சரவையில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது - என்றார்.

கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக, கடந்த மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் நாட்டு மக்கள் தமது வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டியேற்பட்டதால் குறித்த காலப் பகுதியில் மின்சாரப் பாவனை அதிகமாகக் காணப்பட்டதோடு, பல துறைகளில் தொழிலில் ஈடுபட்டவர்களின் வருமானமும் பாதிக்கப்பட்டதைக் கருத்தில்கொண்டு குறித்த நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மின் கட்டணப் பட்டியலுக்கு வழங்க வேண்டிய மானியம் தொடர்பான முன்மொழிவுகள் உள்ளடங்கிய பரிந்துரைகள் சமர்ப்பிப்பதற்காக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர, குழுவொன்றை நியமித்திருந்தார். இது தொடர்பில் ஆராய்ந்த குறித்த குழு, தனது அறிக்கையை நேற்று கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை திறைசேரி அதிகாரிகளுடன் மேலும் ஆராய்ந்து மக்களுக்கு வழங்கக்கூடிய மானியம் தொடர்பான சிபாரிசுகளை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை வகுப்பு அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டிக்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் திறக்கப்பட்டது பி.சி.ஆர். ஆய்வுகூடம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடம் திறக்கப்பட்டுள்ளது.

இது மூலக்கூற்று உயிரியல் வைத்திய ஆய்வுகூடம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதில் பி.சி.ஆர். இயந்திரங்கள் 02, நியூக்ளிய அமிலங்களை பிரிக்கும் தன்னியக்க இயந்திரங்கள் 02, பாதுகாப்புப் பெட்டகங்கள் 03 நிறுவப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு 500 விமானப் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் குறித்த ஆய்வுகூடம் அமைந்துள்ளது.

குறித்த மருத்துவ ஆய்வுகூடத்தின் மதிப்பு சுமார் 70 மில்லியன் ரூபாவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொரோனாவுக்குள் இன்னொரு தலையிடி**

# ஆபிரிக்க நாடுகளிலிருந்து வந்த 8 பேருக்கு மலேரியா!

அண்மையில் ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருகை தந்த இலங்கையர்கள் 08 பேர் மலேரியா நோய் பாதிப்புடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கியுள்ள 08 பேரே இவ்வாறு மலேரியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மலேரியா ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

பெல்வெஹெர தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியுள்ள 05 பேரும், நீர்கொழும்பு வைக்கால் பிரதேசத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியுள்ள 03 பேருமே இவ்வாறு மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இலங்கையில் எவரும் மலேரியா நோயினால் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், தற்போது வெளிநாடுகளில் இருந்து வந்த பலருக்கு மலேரியா நோய் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் வெளிநாடுகளிலிருந்து வந்த 53 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும், ஒரே வேளையில் அதிகளவான மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் இது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு மலேரியா உள்ள நாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கு மேலதிகமாக, மலேரியா பரிசோதனையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அருகில் நுளம்புகளை அழிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மூன்று தீ அணைப்பு வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வழங்குங்கள்!

**பிரதமரிடம் வணிகர் கழகம் கோரிக்கை**

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு வாகனம் விபத்திற்கு உள்ளாகிப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் மாவட்டம் பாதிப்படைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மாவட்டத்திற்கு மூன்று தீ அணைப்பு வாகனங்களைப் பெற்றுத் தந்து உதவுமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

6 லட்சம் மக்களின் வாழ்வியல் மற்றும் வாழ்வாதார மையங்கள் நிறைந்த மாவட்டமாகவும் வடக்கின் பெரிய நகரமாகவும் விளங்கும் யாழ்ப்பாணம் மாவட்டம் தற்போது ஒரு தீ அணைப்பு இயந்திர சேவைகூட இன்றியே உள்ளது. இதனால் ஒரு சிறு அசம்பாவிதம் ஏற்பட்டாலும் இச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

எனவே இந்நிலையைக் கருத்தில் கொண்டு மாவட்டத்திற்கு மூன்று தீ அணைப்பு இயந்திர வாகனம் வழங்கி மாவட்டத்தின் தேவையை நிறைவு செய்வதோடு இவ்வாறு வழங்கும் தீ அணைப்பு இயந்திரங்களை இயக்குவதற்கான கட்டமைப்புப் பொறிமுறையையும் ஏற்படுத்தித் தருமாறு கோருகின்றோம் - என்றும் அந்த அமைப்பு பிரதமரை வேண்டியுள்ளது.

# இலங்கையின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கவேண்டும் ஐ.நா. சபை

## அரசு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10

இலங்கையின் மீது நிரூபிக்கப்படாத மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அமைதிகாக்கும் படையின் அதன் பங்களிப்புக்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு தனிமனிதனினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் பொறுப்புடைய மிகவும் விரிவான ஒரு கட்டமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை விளங்குவதுடன், அதன் உறுப்புரிமை நாடுகளுடனான தொடர்புகளின்போது அவற்றின் இறையாண்மைக்கு முழுவதுமாக மதிப்பளித்துச் செயலாற்ற வேண்டிய கடப்பாட்டையும் கொண்டிருக்கிறது என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

– இவ்வாறு இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

'ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஜேர்மனியினால் 'அமைதி நடவடிக்கைகளும் மனித உரிமைகளும்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திறந்த விவாதத்துக்கென இலங்கையின் வெளிவிவகார அமைச்சால் அனுப்பிவைக் கப்பட்ட நீண்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நாடுகளுக்குள்ளே காணப்படும் முரண்பாடுகள், நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் ஆகியவற்றினால் மனிதாபிமானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதும் அரசு சார்பற்ற கட்டமைப்புக்களால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள், இயற்கை அனர்த்தங்கள், சுகாதார நெருக்கடிகள் உள்ளிட்ட மேலும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளதுமான தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமாக இத்தகையதொரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருக்கும் ஜேர்மனியின் முயற்சியை வரவேற்கின்றோம்.

அத்தோடு பல தசாப்தங்களாக பல்வேறு நெருக்கடி நிலைகளுக்கு மத்தியிலும் அமைதியை ஏற்படுத்துவதையும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு செயற்பட்ட ஆயிரக்கணக்கான ஆண், பெண் உத்தியோகத்தர்களுக்கு எமது கௌரவத்தையும் வெளிப்படுத்துகின்றோம்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையில் இலங்கையும் தொடர்ச்சியாக அதன் பங்களிப்பை வழங்கிவருவதையிட்டுப் பெருமையடைகின்றோம். ஐ.நா அமைதிப்படையின் நடவடிக்கைகளின்போது மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது மிகமுக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது.

அந்தவகையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அமைதி காத்தல் என்பவற்றில் இலங்கை முழு உறுதியுடன் இருப்பதுடன், இலங்கையின் சார்பில் அமைதிகாக்கும் படையில் பணிபுரியும் வீரர்களுக்கு இவ்விடயங்களில் முழுமையான கோட்பாட்டு அறிவும் செயன் முறைப்பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையில் பொலிஸாருக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்குமான பயிற்சி வழங்கலில் மனித உரிமைகளும் ஓரங்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தால் மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பன தொடர்பில் இராணுவம், பொலிஸாருக்கு விசேட பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவல், குறிப்பாக மோதல் நெருக்கடிகள் காணப்படும் பகுதிகளில் மனித உரிமைகள் மீது வெகுவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக பாதிப்புக்களை எதிர்கொள்ளும் நிலையிலுள்ள சமூகங்களைக் கொண்ட நாடுகளுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் மீது நிரூபிக்கப்படாத மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அமைதிகாக்கும் படையின் அதன் பங்களிப்புக்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு தனிமனிதனினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் பொறுப்புடைய மிகவும் விரிவான ஒரு கட்டமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை விளங்குவதுடன், அதன் உறுப்புரிமை நாடுகளுடனான தொடர்புகளின் போது அவற்றின் இறையாண்மைக்கு முழுவதுமாக மதிப்பளித்துச்செயலாற்ற வேண்டிய கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் – என்றுள்ளது.

# இராவணன் முஸ்லிம் மன்னர்; இதில் மாற்றுக் கருத்து இல்லை

## இப்படிக் கூறுகின்றது உலமாக் கட்சி

கொழும்பு, ஜூலை 10

திருக்கோணேஸ்வரத்தில் பௌத்த விகாரை இருந்தது என்ற தேரரின் கருத்தை ஏற்கமுடியாது. இராவணன் என்பவர் முஸ்லிம் மன்னர். அதனால் அவர் காலத்தில் இஸ்லாமியர்களுக்குரிய இடமாகவே அது இருந்திருக்கும்.

– இவ்வாறு உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கோகர்ண்ண எனும் விகாரை இடிக்கப்பட்டே திருக்கோணேஸ்வரம் ஆலயம் கட்டப்பட்டுள்ளது என எல்லாவல மேதானந்த தேரரால் விடுக்கப்பட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மௌலவி மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

என்னுடைய ஆய்வுகளின்படி இராவணன் என்பவர் முஸ்லிம் மன்னன் என்பதே எனது கருத்து. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியில் 40 அடியில் சமாதியொன்று உள்ளது. 40 அடி சமாதி என்பது இன்று நேற்று வாழ்ந்த மனிதர்களுடையது அல்ல. பல்லாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாகவே அது இருக்கவேண்டும். குறித்த சமாதியானது இராவணனுடையது என்றும், அதற்கு அருகில் இருப்பது அவரின் தாயாருடையது என்றும் இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த சீக்கிய ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல் திருக்கோணேஸ்வரம் கோயிலில் இராவணன் வெட்டு என்ற ஒன்றும் உள்ளது. இலங்கைக்கு பௌத்த மதம் வந்து 2 ஆயிரத்து 500 வருடங்களே ஆகின்றன. இந்தக் காலப்பகுதிக்குள் வந்த எந்தவொரு மனிதனுக்கும் 7 அடி நீளத்துக்கும் மேல் சமாதி இல்லை. எனவே, 40 அடி சமாதி என்பது கிட்டத்தட்ட 30 ஆயிரம், 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களுக்குரியதாகும். 2 ஆயிரத்து 500 ஆண்டுகளைக் கொண்ட பௌத்தர்களின் விகாரையாக எப்படி கோணேஸ்வரம் கோயில் இருந்திருக்க முடியும்? வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அது இருந்துள்ளது.

ஆரம்பத்தில் இலங்கையில் ஆதாமின் வாரிசுகள்தான் வாழ்ந்தனர் என்பதே எனது கருத்து. அதன்பிறகு 2800 ஆண்டுகளுக்கு முன்னர்தான் விஜயன் வந்தார். விஜயன் எந்த மதத்தை சார்ந்தவர் என்ற வினா எழக்கூடும். அவர் ஒரு பௌத்தராக வரவில்லை என்பது மட்டும் உறுதி. விஜயன் வரும்போது இங்கு குவேனி வாழ்ந்துள்ளார். 2500 ஆண்டுகளுக்கு முன்னர்தான் பௌத்த மதம் வந்ததெனில் குவேனியும் பௌத்தராக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஒன்று மதம் இல்லாமல் வாழ்ந்திருக்கலாம். இல்லையேல் இந்து, இஸ்லாமாக வாழ்ந்திருக்கலாம். என்னுடைய ஆய்வின்படி அவர்கள் எல்லாம் ஆதாம் வாரிசுகளாகும்.

அதேவேளை, ராமர் என்பவர் ரஹ்மான். சீதா என்பவர் சய்யிதா. மரபு ரீதியாக பேச்சு வழக்கு மாறியபோதே பெயர் மாறியிருக்கும். அவை இஸ்லாத்துக்குரிய சொற்கள். ராமரைக் கூட நாம் இறைதூதுவராக இருக்கலாம் என்றே நம்புகின்றோம். இராவணன் முஸ்லிமாக வாழ்ந்தவர். அவர் சில தவறுகளைச் செய்திருக்கக்கூடும்.

அவரை நல்வழிப்படுத்துவதற்காக இறைவனை ராமரை, இறைதூதுவராக அனுப்பியிருக்கலாம் என்பதுதான் எனது வாதம். இராவணன் சம்பந்தமான கதைகளில் நிறைய கற்பனைகள் உள்ளன. அவருக்கு நிறைய அறிவு, சக்தி இருந்துள்ளது. இதனையே 10 தலைகள் என வர்ணித்துள்ளனர் – என்றார்.

# ஒருநாளில் 60 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 60 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கந்தக்காட்டிலுள்ள போதைப்பொருள் அடிமையானோர் புனர்வாழ்வு மையத்திலிருந்த 56 பேர், அதில் ஆலோசக விரிவுரையாளராகப் பணியாற்றும் மாரவிலவைச் சேர்ந்த பெண் ஒருவர், கட்டாரிலிருந்து வந்த ஒருவர், கடற்படையைச் சேர்ந்த ஒருவர், பங்களாதேஷிலிருந்து வந்த ஒருவர் ஆகிய 60 பேரே நேற்றுப் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,084 இலிருந்து 2,154 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,967 இலிருந்து 1,979 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 950 பேர் அடங்குகின்றனர். இதில் 906 பேர் கடற்படையினராவர். குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 894 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டவர் 31 பேர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர் 802 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 833 பேர் இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## இனி இது...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கத்தில் வீழ்த்துவதில் பஸிலுக்கு நிகர் யாருமில்லை என்ற நிலைமை இருந்தது.

அப்படி வளைத்துப் போட்ட சிலர் திடீரென மஹிந்தர் பக்கத்தில் இருந்து விலகினர்.

அது மஹிந்தருக்குப் பின்னடைவு என்று சில ஊடகங்கள் விமர்சித்த போது தான் அந்தப் பகிரங்க அறிவிப்பை வெளிப்படுத்தினார் மஹிந்தர்.

*"எமது கட்சிக் கதவு, சலூனின் கதவு போன்றது, இரண்டு பக்கமும் திறக்கலாம். வெளியில் இருப்போர் விரும்பினால் உள்ளே தள்ளிக் கொண்டு வரலாம். அதே போல உள்ளே இருப்பவர்கள் விரும்பினால் வெளியே கதவைத் தள்ளிக் கொண்டு கட்சியை விட்டு வெளியேறலாம். யாரும் வரலாம். யாரும் போகலாம். யாரையும் நாம் மறிக்க மாட்டோம். எமக்கு அது பற்றிக் கவலையே இல்லை. விரும்பினால் வாருங்கள். விரும்பினால் போங்கள்!"* – என்றசாரப்பட அறிவித்துக் கலக்கினார் மஹிந்தர்.

அன்று முதல் 'சலூன் கதவு' தெற்கு அரசியலில் முக்கிய சொற்பதம் ஆகி விட்டது.

ஆனால், இப்போது தங்களிடம் கட்சியின் 'சலூன் கதவு' மூடப்பட்டு விட்டதாக பஸில் ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் பஸில் ராஜபக்ஷவிடம் *"உங்களின் கட்சியின் சலூன் கதவு இப்போதும் திறந்துதான் உள்ளதா?"* என்று ஒரு செய்தியாளர் கேட்டார்.

*"அது 2005 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் திறந்துதான் இருந்தது. இப்போது அது மூடப்பட்டுள்ளது"* என்று பதிலளித்தார் பஸில்.

சரி. நல்லது. இங்கு வடக்கு அரசியலில் நமது தமிழ்க் கட்சிகளின் கதவுகள் எப்படி இருக்கின்றன?

அனேகமான கட்சிகளில் – தமிழ்க் கூட்டமைப்பு உட்பட்ட கட்சிகளில் – சலூன் கதவைத் திறந்து கொண்டு யாரும் புதிதாக உள்ளே நுழைபவர்களாக இல்லை. அவை இப்போதெல்லாம் உள்பக்கமாகத் திறப்பவையும் அல்ல. உள்ளே இருப்பவர்கள்தான் வெளிப்புறமாகத் திறந்து கொண்டு வெளியே போய்ப் புதுப்புதுச் சலூன்களையும், கதவுகளையும் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுதான் தமிழர் தரப்பின் இன்றைய துரதிருஷ்ட நிலைமை. அதுதான் உண்மை நிலைவரமும் கூட...

– மின்னல் –

# தமிழ் இனத்தின் வரலாற்று அடையாளங்களை காப்பதற்கான தேர்தலாகவும் இது அமைகிறது

## மக்களுக்கு அறிவுறுத்துகிறார் வேட்பாளர் சிறீதரன்







எமது மண்ணினதும் இனத்தினதும் வரலாற்று அடையாளங்களைச் சிதைப்பதற்கோ மாற்றுவதற்கோ நாம் எவருக்கும் இடமளிக்க முடியாது எனத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தம்பகாமம் பகுதியில் மக்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

எமது மண்ணின் தொல்பொருள் அடையாளங்களை கையகப்படுத்தும் வகையிலே கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள தொல்லியல் செயலணியின் உறுப்பினரில் ஒரு தேரர் திருகோணமலை தங்களுடையது என்கிறார். நல்லூர் தங்களுடையது என்கிறார். இவை எல்லாம் சிங்கள தேரர்கள் கூறுகின்றபோது கோட்டாபய அரசிற்கு ஆதரவு கொடுப்பவர்களின் ஆசீர்வாதத்துடனேயே அவை நடைபெறுகின்றன.

இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது இனம் தனது இருப்பைத் தக்க வைப்பதற்காகவும் அரசியல் தீர்விற்காகவும் இந்த மண்ணிலே 70 ஆண்டுகளுக்கு மேலாக போராடிக்கொண்டிருக்கின்றது. ஆயினும் சிங்கள அரசு எமது இனத்தின் வரலாற்றை அழிப்பதற்குத் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. அதிலும் குறிப்பாக கடந்த அரசு எமது மண்ணினுடைய வராலாறுகளை மாற்றுவதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக கிளிநொச்சி மண்ணிலே கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உள்ள இராணுவ நினைவுச் சின்னத்திலே பழைமை வாய்ந்த கற்களை வைத்து அந்த நினைவுச் சின்னத்தை கட்டியெழுப்பியிருப்பதன் நோக்கம்தான் என்ன? இதற்குப் பின்னால் வரலாற்றை மாற்றி அவர்கள் தங்களுக்கு தேவையான ஒரு வரலாற்றை எழுத சிங்கள அரசு விரும்புகிறது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமுடியாது.

இவற்றை கருத்தில் கொண்டே எமது தலைவர் பாடசாலைகளில் தமிழீழ வரலாறு என்கின்ற பாடத்தை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியிருந்தார். சிங்கள அரசுகள் மட்டுமல்ல, எம்மினத்தின் அடையாளங்களை அழிக்கவில்லை. இந்த அரசோடு இருக்கும் எம் இனத்தின் புல்லுருவிகளும் சிங்கள அரசு விரும்பியது போன்று கிளிநொச்சி மண்ணின் வரலாற்றை மாற்றி எமது இனத்திற்கு பெரும் துரோகம் இழைத்திருக்கிறார்கள். எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன், சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ், இன்னும் எத்தனையோ சமர்க்கள நாயகர்களை வைத்து அஞ்சலி செய்த கூட்டுறவாளர் மண்டபத்தை மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வன் திறந்து வைத்துள்ளார் என நினைவுக்கல்லில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவை எல்லாம் எம் இனத்தின் புல்லுருவிகளின் துரோகத்தனத்துடனும் ஆசிர்வாதத்துடனே நடைபெற்றிருக்கின்றன. மலையக மக்கள் முன்னணியினுடைய தலைவர் முன்னாள் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்ட மத்தியகல்லூரியின் பிரதான மண்டபம் தமது தேவைக்கு ஏற்றவாறு தங்களால் திறந்து வைக்கப்பட்டது என நினைவுக் கல்லில் பெயர்களை செதுக்கியிருக்கிறார்கள்.

இவை எல்லாம் எமது அடுத்த தலைமுறைக்கு எமது வரலாற்றை தெரியவிடாது தடுத்து இந்த நாட்டிலே சிங்கள பௌத்த மேலாண்மையை நிறுவ நினைக்கிற சிங்கள அரசுக்குத் துணைபோகும் செயற்பாடுகளே.

நடைபெறப்போகும் தேர்தல் என்பது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தலாக நாம் நோக்க முடியாது. இந்தத் தேர்தல் எமது இனத்தின் இருப்புக்கான தேர்தல். எமது வரலாற்று அடையாளங்களை காப்பதற்கான தேர்தலாக நாம் நோக்க வேண்டும். – எனவும் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## ரிஷாத்திடம் 10 மணிநேரம் துருவித்துருவி விசாரணை!

கொழும்பு, ஜூலை10

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்க மைய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சுமார் 10 மணி நேர வாக்குமூலம் வழங்கியுள்ளார்.



அவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் அங்கு முன்னிலையான நிலையில் இரவு 8 மணியளவில் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

இதேவேளை, கட்டாய விடுமுறையிலுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் நேற்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகியிருந்தனர்.

நேற்று முற்பகல் அவர்கள், அங்கு முன்னிலையாகியிருந்த நிலையில் பூஜித ஜயசுந்தர சுமார் 9 மணி நேரத்தின் பின்னர் அங்கிருந்து வெளியேறினார். ஹேமசிறி பெர்னாண்டோ அதன் பின்னர் அங்கிருந்து வெளியேறியினார்.

## கரையோரப் பகுதி மக்களுக்கு கொரோனா பற்றி விழிப்புணர்வு

### கடற் படையினர் முன்னெடுப்பு





வடக்கு கடற் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கடற்கரையை அண்டி வாழும் மக்களுக்கு கொரோனா நோய்த் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

வடக்கில் முக்கியமான கடற்கரையை அண்டிய பகுதிகளில் விழிப்புணர்வு செயற்பாடுகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு வருகை தருவோர் மூலம் வடக்கில் கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள்அதிகளவில் காணப்படுவதன் காரணமாக அதனைத் தடுக்கும் முகமாக விழிப்புணர்வு செயற்பாடுகள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மண்டைதீவு ,அல்லைப்பிட்டி மயிலிட்டி, வடமராட்சி கிழக்கு,போன்ற இடங்களில் கடற்படையினரால் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் கொரோனா தாக்கம் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் வருபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் இதுதொடர்பான தகவல்களை பொதுமக்கள் கடற்படையினருக்கு வழங்க வேண்டுமெனவும் இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள **Green Media House Pvt Ltd** நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2020 இல் வெளியிடப்பெற்றது.